9886

அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

-Page - 209-

மலர் : 16	குரோதி ஞு ஆவணி மீ	வருட சந்தா
இதழ் : 5	ஆகஸ்ட்டு—செப். மீ 1964	ரூ. 3-00.

-209-



வேள்விப் பாம்பை வீழ்த்தி விடம் தீர்த்த அருளாடல்

சித்திர விளக்கம் 29. பக்கம் : 199.

ACC. NO. 9886

பொருளடக்கம்

பக்கம்

1. மாவிளக்கு (திருப்புகழ்மணி) ... 193
2. நாகம் எய்தது (கி. வா. ஜகந்நாதன்) ... 199
3. குமாரஸ்தவ விளக்கம் (திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B. A., B. T.) ... 202
4. 'வாசித்த நூல் மதங்கள்'—(கோடைநகர்) திருப்புகழ் விரிவுரை (குகஶ்ரீ) ... 204
5. தென்னாட்டுத் தலதரிசனம். (தணிகைமணி வ. சு. செங்கல்வராயபிள்ளை, M.A.) 214
6. யாரிவர் அறியோம் (அன்பன்) ... 219
7. சொல்ல முடியுமா? (கி. வா. ஜ.) ... 226
8. கருவூரார் சொல்லும் கற்பமுறை (ரஸபதி) ... 230
9. Humanity is the Rest house of divinity (*Thiruppugal Mani*) 239

Grams: MURSOKS. Phone: 51388

"ஆரமுதமான சர்க்கரை தேனே !
ஆன அநுபூதியைத் தருவாயே!"

வெண்மையான சலவைக்கு

ஒயிட் ஹார்ஸ் சோப்

தயாரிப்பாளர்: D. பங்காரு செட்டியார்,
நேஷனல் இன்டஸ்ட்ரீஸ்,
220, T. H. ரோட், தண்டையார்பேட்டை, சென்னை-21



எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே.

ஆசிரியர் · கு. முத்துஸ்வாமி

மலர் 16	குரோதி ௵ ஆவணி ௴ ஆகஸ்ட்டு—செப்டம்பர் 1964	இதழ் 5

மாவிளக்கு

(திருப்புகழ்மணி)

கலியுகத்தில் இரண்டு பெரிய மூர்த்திகள் விளையாடி மக்களுக்கு அருள்புரிகின்றனர். அவர்கள் கண்ணனும் கந்தனுமாவர். இந்த மூர்த்திகளை ஒரு முகமாய்ப் பார்க்கும்பொழுது வேங்கடாசல நாயகனாகவும், மற்றொருமுகமாய்ப் பார்க்கும் பொழுது முருகனாகவும் காட்சி யளிப்பர்.

நம்மை வருத்தும வெவ்வினைகளைக் கடத்துவிக்க ஆண்டவனைத்தவிர வேறு யாரால் முடியும். தன்னை நாடிவரும் அன்பர்களின் வெவ்வினைகளைக கடத்துவிப்பதற்காகவே அவன வேங்கடாசல நாயகனாய் வேங்கடத்தி லிருக்கிறான்.

ஒட்டி உறவுகொளும் உள்ளந் தனையுதறி,
வெட்டிப் பிரிந்து, விழல்விரும்ப மாட்டோமே

"பாருருவி நீரெரிகால் விசும்புமாகிப்
பல்வேறு சமயமுமாய்ப் பரந்துநின்ற
ஏர்உருவில் மூவருமே என்னநின்ற
இமையவர்தம் திருவுருவை எண்ணும்போது
ஓர்உருவம் பொன்னுருவம ஒன்றுமா கடலுருவம்
ஒன்று செந்தீ ஒத்துநினற
மூவுருவும் கண்டபோது ஒன்ரும்ஜோதி
முகிலுருவம் எம்மடிகள் உருவந்தானே"

பகவானுடைய ரூபத்தைப் பார்க்கவேண்டுமென்ரூல், மூன்று உருவங்கள் அந்த ரூபத்தில் காணப்படுகின்றனவாம். ஒருபுறம் தீவண்ணமும் மற்ரோர்புறம் பொான் வண்ணமுமாம். இன்னெருபுறம் முகில் வண்ணமாம். ஜோதி முகிலுருவமே நான் வணங்கும் கடவுளினுருவம் என்ருர்.

உயிருக்குயிராய் எங்கும் நிறைந்திருக்கும் பகவானை நாம் எப்படிப் பார்ப்பது? நமககாக அவன் எடுத்துக்கொள்ளும் கருணை உருவங்களின்மூலமாகவும் அவன் செயலின் மூலமாகவும்தான் காணலாம்.

நாமோ சமுசார சமுத்திரத்தில் ஆழ்ந்து கிடக்கிரேம். அவனே அச் சமுத்திரக் கரையில் நின்று நம்மை வாவா வென்றழைத்துக் கொண்டிருக்கிருன். அவனை யடைவதெப்படி?

நமக்கு அவன் ஒரு ஓடம் கொடுத்திருக்கிறன். அதுவே உடலென்னும் ஓடம். அந்த ஓடம் உடைவதற்குமுன் ஆண்டவனை யடைய வேண்டும்.

அன்பர் உணர்வுறவர் ஆவார் தமையகன்று,
துன்ப மினுக்குறவில் தோய்வதுவும் ஆகாதே

" ஓடமுள்ள போதலோ ஓடியாடி யுழலலாம்
ஓடமுள்ள போதலோ உறுதிபண்ணிக் கொள்ளலாம்
ஓடமும் உடைந்துபோய் ஒப்பற்ற வெளியிலே
ஆளுமில்லை கோலுமில்லை யாருமில்லை யானதே.'

இந்த ஓடத்தைக் கண்டபடி செலுத்தி உடைத்து விடாமல், சரியான வழியில் செலுத்தினல், ஆண்டவனை யடையலாம்.

அழிவதற்காகவா ஆண்டவன் நம்மைப் படைத்தான். இல்லவே இல்லை. நித்தியப் பொருளைக் கண்டு பிடித்து, நித்தியானந்தத்தை யடைவதற்காக வல்லவோ நம்மைப் படைத்திருக்கிறுன்.

ஒரு பக்கம் பக்தியென்னும் துடுப்பினுலும், மற்றோர் பக்கம் ஆண்டவன் நம்மைக் காப்பான் கைவிட மாட்டான் என்ற நம்பிக்கையாகிய துடுப்பினுலும் தள்ளினல், உடம்பெனும் ஓடம் நேர்மையான வழியில் சென்று சமுசாரக் கடலைக் கடந்து நித்தியானந்தத்தை யடையும்.

ஆண்டவன் எங்குமிருக்கிறுன். அவன் என்னுள்ளிருக்கிறுன் என்ற உறுதியும், அவன் என்னைக் கைவிடமாட்டான், எதிர்காலத்தை நல்லதாகச் செய்வான் என்ற நம்பிக்கையும் மிகமிக அவசியம்.

பாண்டியன் பெரியாழ்வாரைப் பாடச் சொன்னுன். அதற்கவர், எனக்குப் பாடத் தெரியாது. ஆனல் என்னுள்ளிருக்கும் ஆண்டவன் பாடுவான் என்று அவனை நினைத்துப் பாடினுர். பாட்டு பாண்டி

மனசாட்சி மாய, மதியதனின் பின்னுய்,
விநயம் மிகுமுறவை, வீணடிக்க மாட்டோமே

யன் மனத்திற்குகந்ததாயிருந்தது. அதனால் மகிழ்ந்து ஆழ்வாரை யானைமேலேற்றி ஊர்வலம் செய்வித்தான். அப்பொழுது நீலமேக சியாமளனாய், சங்கு சக்கரமேந்தித் தன்னுடன் வரும் நாராயணனுடைய அழகிய கோலத்தைக் கண்டார். அவனுக்குக் கண் பட்டுவிடப் போகிறதே என்று தோன்றியதாம் ஆழ்வாருக்கு. அதனால்,

''அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு
வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு''

என்று வாழ்த்துப் பாடிவிட்டார்.

நீ என்னைப் பிரியாமலும், நானுன்னைப் பிரியாமலும் இருவரும் நீடூழி வாழவேண்டும் என்றார்.

ஆழ்வார் பாடிய கண்ணனே முருகன். அவனே வேங்கடாசலபதி. கண்ணால் ஜீவராசிகளைப் பார்த்து ரக்ஷிப்பவன், அல்லது ஜீவராசிகளுக்குக கண்ணாயிருப்பவன கண்ணன். அவன் பன்னிரு கண்ணனும் முக்கண்ணனுமாயு மிருப்பன்.

அருணகிரியார் திருவேங்கடத்திற்குச் சென்றார். அங்கு அவர் முருகனைக கண்டாராம்.

''வேந்த குமாரகுஹ சேநத மயூரவட வேங்கட மாமலையி லுறைவோனே''

என்று பாடினார்.

புலனகள் இழுத்தவழி போய்ப புந்தி நையாமல்,
விலஙகி இருந்தால், விளையாது வேதனையே

வீட்டிற்குத் திரும்பிவந்த பிறகு ஒருவர் அவரைப் பார்த்து, திருப்பதி சென்றீரே, ஸ்ரீனிவாஸனைப் பார்த்தீரா என்று கேட்டார்.

அதற்கு அருணகிரியார், நான் ஸ்ரீனிவாஸனைப் பார்க்கவில்லையே, முருகனை யன்றோ பார்த்தேன். கண்ணன் மாயனுயிற்றே. ஒருவேளை அவன் முருகனுக்குள் ஒளிந்துகொண் டிருக்கிறானென்று பார்க்கிறேன் என்று, மறுபடியும் சென்று பார்த்தார். அப்பொழுது ஸ்ரீனிவாசனைக் கண்டார்.

"உபசாந்த சித்த குருகுல பவ பாண்டவர்க்கு வரதன்,
மையுருவோன், பரசித்த நெடியவன், இருஷீகேசன்"

என்று பாடினார்.

முருகா! நீ இருஷீகேசனுன கண்ணனு? நீ இரு உருவமாகத் தரிசனம் தந்தாயே அப்பா! உன் கருணையை என்னென்று சொல்வேன் என்றார்.

ஏகமாயிருக்கும் தெய்வமே பலமுகமாக வந்து தரிசனம் தருகிறது. அதன் ஒருமுகத்திற்குக் கண்ணன் என்று பெயர். மற்றொரு முகத்திற்கு முருகனென்று பெயர்.

எல்லா ரூபங்களும் முருகனுக்குள் அடங்கி யிருப்பதால், "முப்பத்து முக்கோடி தேவரும் உன் இதய கமலத்தடக்கம்" என்று பாடினார் கவிக்குஞ்சர பாரதியார்.

செயற்கைச் சிரிப்பெழுப்பிச், சேறுளத்தில் சேரார்,
இயற்கை வழியில் இருக்கின்ற உத்தமரே.

எங்கும் என் ஆண்டவன். அவனுக்கு நான் அடிமை என்று நினைப்பவர்க்குப் பூரண அருள் தருகிறான்.

மாவிளக்கேற்றி ஆண்டவனை வழிபடுகிறோமே, அதன் கருத்தென்னவென்று பார்ப்போம்.

சரீரமே மாவு. அது புழுத்து விடாதப்படி அதில் ஆர்வமென்னும் நெய்யை விட்டு, சிந்தை யென்னும் திரியைப் போட்டு ஞானமாகிய விளக்கை யேற்ற வேண்டும்.

" இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது ஜோதி யுள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமசிவாயவே "

என்றார் அப்பர்.

ஆண்டவனுடைய நாமங்களில் ஜோதி யிருக்கிறது. அன்புடன் நாமங்களைச் சொன்னால், சிந்தை யென்னும் திரியில் ஜோதி பற்றிக் கொள்ளும். இதுவே மாவிளக்கேற்றுவதன் கருத்து.

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா—நன்குருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத தமிழ்புரிந்த நான.

என்ற ஆழ்வார்பாடல் இந்தக் கருத்தையே உணர்த்துகின்றது.

ஆர்வா ரதனை அவாவுகினற இவ்வுலகில,
தேரல், தெளிதல், திணையளவும் இல்லையரோ

நாகம் எய்தது

(கி. வா. ஜகந்நாதன்)

அனந்தகுண பாண்டியன் அரசாண்டு கொண்டிருந்த காலம் அது. அவன் இறைவனுடைய பஞ்சாட்சரத்தை எப்போதும மனனம் செய்தான். திருநீறும் கண்டிகையுமாகிய சிவவேடம் புனைந்து கொண்டு விளங்கினுன். எங்கும் மக்கள் சிவபக்தியிலும் சிவ சின்னங்களை அணிவதிலும் சிறந்து திகழ்ந்தார்கள். சிவமணம் எங்கும் கமழ்ந்து பரந்தது.

மதுரையிலும் அதைச் சுற்றிலும் என்ணுயிரம் சமணர்கள் வாழ்ந்திருந்தார்கள். அவர்களுக்குத் தங்கள் சமயத்தை எங்கும் பரப்ப வேண்டும் என்ற ஆர்வம் மிகுதியாக இருந்தது. சைவ சமயம் முன்பினும் சிறப்பாக மக்களின் மதிப்புக்கு உரிய தாக எங்கும் பரவுவதைக் கண்டு அவர்கள் உள்ளம் புழுங்கி ஞர்கள். தம்முடைய மதத்தின் வழியே நின்று அவர்கள் ஒழுகி வருவதை யாரும் தடுக்கவில்லை. அவர்கள் தம் கடமையை ஆற்றிக் கொணடு வாழ்வதைவிட்டுப் பொருமைப் பேயின் தூண்டுதலால், சைவ வளர்சசிக்கு மாருக ஏதேனும் செய்ய வேண்டும் என்று ஆழ்ந்து சிந்தித்தார்கள். மணி மந்திர ஔஷதங்களில் அவர்களும் வல்லவர்கள். ஆதலின் ஏதேனும் வஞ்சக வேள்வி செய்து தீய சக்திகளை உண்டாக்கிச் சைவத் தின் வளர்ச்சியை ஒழிக்க வேண்டுமென்று உறுதி பூண்டனர்.

சைவர்களின் வளர்ச்சிக்கும் வாழ்வுக்கும் உறுதுணையாக இருப்பவன் பாண்டிய மன்னனுதலின், அவனை முதலில் ஒழித்துக் கட்ட வேண்டும் என்று அவர்கள் எண்ணி, ஆபிசார வேள்வி ஒன்றைத் தொடங்கினர். பெரிய குண்டத்தை

பயிரோ வளர்ந்து பயனுகும், மக்கள்
உயிரோ, உளமோ, உருப்படுதல் ஆகாதோ ?

வெட்டி வானளாவக் கொழுந்து விடும்படி எரியை மூட்டி வேள்வி செய்தார்கள். அந்த வேள்வியில் சிவந்த கண்ணோடும் அகன்ற வாயோடும் பிறைபோல வளைந்த பற்களோடும் ஓர் அரக்கன் அந்த வேள்வி குண்டத்தினின்றும் எழுந்தான். "எனக்கு இடும் பணி யாது ?" என்று அவ்வரக்கன் கேட்கச் சமணர்கள், "பாண்டிய மன்னனிடம் சென்று அவனை விழுங்கி வா" என்று ஏவினார்கள்.

அவன் ஒரு பெரிய நாகப்பாம்பின் வடிவெடுத்துக் கொண்டு புறப்பட்டான். வானை எட்டும் வடிவமும், விடம் ஊறிச் சொரிகின்ற பற்களும், வடவைத் தீப்போலக் கொழுந்துவிடும் கண்களும் உடைய அப் பாம்பு கண்டவர் யாரும் நடுங்க வந்தது. பாதாளலோகம் பிறழ்ந்தது. மலைகள் அழுந்தின. பூமி பிளந்தது.

அரக்கனாகிய பாம்பின் விழியழலால் புல் கரிந்தது. மரங்கள் கருகின. அவன் விட்ட மூச்சுக்கு எதிரே காற்றும் அடிக்க முடியாமல் திணறியது.

இப்படிப் பயங்கரமாக நாகம் வருவதை அறிந்த மதுரை மாநகர மக்கள் விரைவாக ஓடிப் பாண்டியனை அடைந்து வணங்கி அது வருவதைத் தெரிவித்தார்கள். நகரத்தின் மேற்கு வாயிலை அணுகிக் கொண்டிருக்கிறது என்றும் சொன்னார்கள். அதனைக் கேட்ட பாண்டியன் அஞ்சவில்லை. "முன்பு மதயானையை விட்ட பேர்வழிகளே இதையும் வரவிட்டிருக்கிறார்கள். இதையும் அழித்து அருள் செய்ய நாகாபரணாகிய எம்பெருமான் இருக்கிறான்" என்று எண்ணி ஆலவாயுடைய பெருமான் திருக்கோயிலை அடைந்து எம்பெருமானை வணங்கினான். "எம்பெருமானே, அடியேன் வழிவழியே உனக்கு அடிமைசெய்யும் குலத்தில் தோன்றி

எத்தனையோ குற்றம் இருக்கின்ற தானாலும்,
பக்தியெனும் தீயிலவை பஸ்பமாம் பாரீரே

யவன். அடியேன் உன்னை ஒருபோதும் மறந்தேனல்லன். இந்த நகர்முழுவதும் அழியும் பொருட்டு இழிகுணமுடையவர்கள் நாகத்தை விட்டிருக்கிறார்கள். அதனை அழிப்பதற்கு நின் திருவருள் துணைசெய்ய வேண்டும்'' என்று மனமுருகி வேண்டிக் கொண்டு விடைபெற்று வெளியே வந்தான்.

பிறகு கையில் வில்லையும் அம்பையும் ஏந்திக் கொண்டு பாண்டிய மன்னன் மேற்கு வாசலை அடைந்தான். எதிரே வரும் நாகத்தைக் கண்டான்.

படத்தை விரித்து எட்டுத் திசைகளையும் கதிரவனையும் மறைத்து எங்கும் இருள பரவும்படி செய்து, நஞ்சு கொப்புளிக்கும் பற்களை அதுக்கி வாயைப் பிளந்து நகர முழுவதும் விழுங்குவது போலச் சீறி வந்தது நாகம். பாண்டிய மன்னன் கையில் வில்லை யெடுத்து நாணேற்றி அக்கினி யம்பைத் தொடுத்து விடுத்தான். அவன் விடுத்த அம்புகள் எல்லாவற்றையும் நாகம் கடித்து உமிழ்ந்தது. அதைக் கண்டு சினம் மூண்ட மன்னன் திரிபுராரியாகிய இறைவனைத் தியானித்து அர்த்த சந்திரபாணம் ஒன்றை எய்தான். அது அந்தப்பாம்பின் உடலைத் துணித்தது. இடிபோல முழங்கி, சிவந்த இரத்தம் வெள்ளமாக ஓட உடம்பு புரளக் கீழே விழுந்தபோது பாம்பு நஞ்சைக் கக்கியது.

அந்த நஞ்சு எங்கும் பரந்து நகரம் முழுவதும் செறிந்தது; சோலை, கிணறு, குளம், நாற்சந்தி, சபைகள், கடைவீதி, அகழி, மதில், அரசன் வாழும் அரண்மனை, மாடம், உப்பரிகை, கோபுரம், அரங்குகள் முதலிய இடங்களிளெல்லாம் பரந்தது; அங்குள்ள மக்கள் யாவரும் அப்படி யப்படியே உறங்குபவர்களைப் போல மயங்கி வீழ்ந்தார்கள். அதுகண்ட மன்னவன் மீண்டும் இறையவன் திருக்கோயில் சென்று

புகழுமுறும், புண்ணியமாம் போதினிலே, பல்ல
இகழற் குறுசெயல்கள், எப்படியோ நேர்கிறதே

வணங்கினன். பின்பு, "எம்பெருமானே, முன்பு இந்நகரத்துக்கு வந்த பல அல்லல்களையும் போக்கிப் பாதுகாத்தருளினய். இப்போது பாம்பின் கொடு நஞ்சால் விளைந்த இன்னலையும் போக்கி அருள் புரிய வேண்டும்" என்று வேண்டினன.

அவன வேண்டுகோளுக்கு இரங்கிய சோமசுந்தரக் கடவுள் தனனுடைய சடைமுடியிலுள்ள மதிக் கொழுந்திலிருந்து ஓர் அமுதத் துளியைச சிறிது தெளித்தான். அது பாலிற் பிறைபோல எங்கும் கலந்து மதுரா நகரமாக மீண்டும் நகரத்தைப் புனிதமாக்கியது. மயங்கி விழுந்த மக்கள் யாவரும் பழையபடியே உணர்வுற்று மீண்டும் தங்கள் தங்கள் காரியங்களைச் செய்ய முற்பட்டார்கள்.

கதிரவன்முன் இருள் போலவும், இறைவன் திருவருள் முன் மலத்தின் வலிமை யெனவும், அமுதத்தினல் விடம் அகலவே யாவரும் இன்ப வாழ்வு பெற்று இறைவனைத் துதித்து மகிழ்ந்தார்கள்.

குமாரஸ்தவ விளக்கம்

(திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A., B.T.)

அமாரபதயே நமோநமஃ

அமார - காமாரியான சிவனுருக்கு; **பதயே** - தலைவனுக்கு; **நமோநமஃ** - போற்றி! போற்றி!!

அமாரபதி :

ந+மாரஃ = அமாரஃ 'ந' என்ற சொல் ஒரு தொடரின் முதற் பதமாக வந்தால், 'ந'கர உயிா மெய்யில் (ந் + அ) நின்ற நகரப்புள்ளி (ந்) நீங்கி 'அ'கரம் நிற்கும். 'ந'கரமும் 'அ'கரமும் ஒரே பொருள் உடையவை. அவற்றில் 'அ'கரம் (1) அன்மை,

---

உத்தமம் ஆம்வழியை உணர்த்தும் கலை, இன்று
சுத்தவட்டை யாகிச் சுழிபபதுவும் என்னேயோ ?

(2) இன்மை, (3) மறுதலை முதலிய பல பொருள்களில் வரும் என்று சப்த கற்ப துருமம் கூறுகிறது. அவ்வித மூன்று பொருள்களிலும் 'அமார' என்ற சொல்தரும் சிறப்புக் கருத்துக்களைக் காணபோம்.

(1) அன்மைப் பொருள்

அநேகம் = ந+ஏகம் — ஒன்று அல்ல. அதாவது 'பல' என்று பொருள் தருவது போல்வது. இந்த அன்மைப் பொருளில ந+மார என்ருல் 'மார' கொலைதொழில் அல்லாதவர். அதாவது கொல்லாமை விரதியர், அஹிம்சா மூர்த்திகள் என்று பொருளாகும். எனவே, அமாரபதி என்பது கொல்லா விரதியரான ஞானிகள் தலைவன் எனவாகும்.

(2) இன்மைப்பொருள் :

அமலம் — ந+மலம் — மலம் (அழுக்கு) இல்லாதது. அப்பிரகாசம் — ந+பிரகாசம் — ஒளியில்லை. அபோசனம்— ந+போசனம் — உணவு இன்மை. ஆகையால் உபவாசம் எனப் பொருள்படுவது போன்றது. இவ்வித இன்மைப் பொருளில் 'அமார' என்ருல், 'மார'—காமம்; அ-இல்லாதவர். அமாரபதி-காமமில்லாதவர் தலைவஞன குமாரவேள் என்க.

(3) மறுதலைப் பொருள் :

அதருமம் - ந+தருமம். தருமத்திற்கு மறுதலையான பாவம் எனப பொருளபடுவது. இநத *மறுதலைப் பொருளில்* 'அமார' எனருல, மாரனுககு விரோதி சிவபிரான். காமாரி என்பது சிவனுககுப பெயர். எனவே அமாரபதி - காமனை முனிந்த கண்ணுதலுக்குத் தலைவஞன *முருகபிரான்* எனறும் பொருளதருவது காணக.

கொலை செய்யா விரதிகளான ஞானியர் தலைவன் என்ற பொருள பயககு, 'அமாரபதி' என்று அழைக்கும் அழகை என்னென்பது!

ஐம்புலனகள போனவழி ஆட்டமது போடாமல்,
நம்பிமன சாட்சியுடன், நாம்வாழ்தல் என்றேயோ ?

கோடைநகர்

திருப்புகழ் விரிவுரை

(குகஸ்ரீ.)

வாசித்த நூல்ம தங்கள் பேசிக்கொ டாதவிந்து
வாய்மைப்ர காச மென்று நிலையாக
மாசிக்க பால மன்றில் நாசிக்கு ளோடுகின்ற
வாயுப்பி ராண னென்று மடைமாறி
யோசித்த யாருடம்பை நேசித்து ருதலைந்து
ரோமத்து வார மெங்கு முயிர்போக
யோகச்ச மாதி கொண்டு மோகப்ப சாசுமண்டு
லோகத்தில் மாய்வ தென்று மொழியாதோ;
வீசப்ப யோதி துஞ்ச வேதக்கு லாலனஞ்ச
மேலிட்ட சூர்த டிந்த கதிர்வேலா!
வீரப்ர தாப பஞ்ச பாணத்தி னுல்மயங்கி
வேடிச்சி காலி லன்று விழுவோனே!
கூசிப்பு காவொ துங்க மாமற்றி காதரிந்த
கூளப்பு ராரி தந்த சிறியோனே!
கோழிப்ப தாகை கொண்ட கோலக்கு மாரகண்ட
கோடைக்குள் வாழ வந்த பெருமானே!

(பதவுரை) (வீசப்பயோதி............கதிர்வேலா!)

வீசு அ பய உததி துஞ்ச - (அலைகளை) வீசி அசசம் விளைத்த அனறைய கருங்கடல் வறளவும்;

[அகரம் - அதி பழமையை அறிவித்தது. உததி என்பது, ஓசை நயம் கருதி உதி என இடை குறைத்தது.]

எளியவழி பாடுகண்டு எய்துசிவம்,இன்று
களியார வாரத்தைக் கண்டுவெறுக் கின்றதுவே.

வேதக் குலாலன் அஞ்ச - (ஓயாது) வேதம் ஓதுபவரும், (குவலயத்தைப் படைக்கும்) குயவருமான பிரமதேவர் (அளவிறந்து) அஞ்சுமாறு;

மேல் இட்ட சூர்தடிந்த கதிர்வேலா - எதிரேறி வந்து அச்சுறுத்திய (ஆணவ) சூரன் கொட்டம் அடங்கவும், வீரச் செயல் ஆற்றிய ஒளிமயமான வேல் இறைவா!

[குலாலன் - (ஊழ்க்குத் தககபடி, உலக) குலங்களை உருவாக்குபவன். மேலிடுதல் - ஆக்ரமித்தல். தடிதல் - தண்டித்தல்.]

(வீரப்பிரதாப .. ..காலில் விழுவோனே!)

வீர பிரதாப பஞ்ச பாணத்திஞல் மயங்கி - வீர விலாசம் விளங்கும் (காமனது) ஐந்து கணைகளால் கலங்கி;

வேடிச்சி காலில் அன்று விழுவோனே - அந்நாளில், வேடர்மகள் திருவடிகளில் (அடைக்கலம் என்று) விழுந்தவனே!

[மயக்குதல் - பொருளற்ற ஒன்றில் புத்தி குழம்புதல். விழுந்தோனே என்னுமல், விழுவோனே என்றது, இறந்த காலத்தை எதிர் காலம் ஆக்கிய கால வழுவமைதி.]

(கூசிப்புகா .... சிறியோனே!)

கூசிப் புகா ஒதுங்க மாமன் திகாது அரிந்த - (உள்ளம்) நாணி (ஓடிப்) புகலிடத்தில் ஒதுங்குமாறு, (தக்கஞகிய) மாமன் தலையைத் தடைபடாது தள்ளியவரும்;

கூளப் புராரி தந்த சிறியோனே- எளிய சாம்பர் ஆம்படித் திரிபுரத்தைச் சிரித்து எரித்தவருமான சிவஞர் அருளிய இளமை மேம்பாடு உடையவனே! ;

[திகாது - திகைத்து இராமல். கூளம் - பொசுங்கிய குப்பைப் புழுதி.]

எல்லாம் உணர்ந்தவர்கள் இல்லையென வாயாடேம்;
கல்லோர்கள் உள்ளனரே, நாம் பணிந்து வாழ்வோமே

(கோழிப் பதாகை............பெருமாளே!)

கோழிப் பதாகை கொண்ட கோலக் குமார - கோழிக் கொடி பிடித்த (முழுதும்) அழகிய குமரேசா!
[பதாகை - வெற்றிக்கொடி.]

கண்ட கோடைக்குள் வாழ வந்த பெருமாளே - (கோடை வெயிலில் கிடைதத குளிர்தருப்போல், பேருகக்) காணப் பெறும் கோடை எனும் பதியில், (எவரும் சேவித்து) இன்புறு மாறு எழுந்தருளியுள்ள பெருமிதம் எய்திய பெரியோனே;

[குமாரகண்ட என்பதை, குமார அகணட எனப் பிரித்து, அகரம் தொக்கநிதெனக் கொண்டு, குமாரனே! அகண்டனே என விளித்ததுமாம். அகண்டன் - ஏகுமான எம்பிரான்.]

(வாசித்த நூல் மதங்கள் ஒழியாதோ?)

வாசித்த நூல் மதஙகள் கொடாத பேசி- (நுணுகிக்) கற்ற நூற்களும், (சால்பு மிகுந்த) சமயங்களும் சொல்லாத (வறண்ட) சொறகளால்) வாதாடி;

[அருள் நூறகளும் அறிவிக்கவில்லை; தெய்விக சமயங்களும் தெரிவிக்கவில்லை; எனினும் ஊழ் இடைவநது ஊடல் புரிய, வெறும் யுக்தி வாதங்களாய், மதியை மறநத மதவாதங்கள் நாட்டில் மலிந்தனவே என்று, பாவதநின் பரிசெண்ணிப் பதைததது உரைத்த செய்தி யிது.]

விந்து வாய்மை பிரகாசம் என்று - (விழலான உடலின்) வீரியததையே உணமை ஒளி எனறு (ஏமாளித் தனமாக) எண்ணி;

நிலை ஆக (நிலவுலகு அழியும் காலத்தும்) நாம் மட்டும் நீடித்து இருப்பம் என நினைத்து;

மாசி கபால மன்றில் - மேகம் போல் மேல் கவிந்த (தலை ஓடாகிய) கபாலம் என்னும் பிரமரந்திரத்தில்; [மாசி - மேகம்; தடம் எனினுமாம்.]

ஊன்றி எதையும் உணராது பேசுநரைச்,
சான்றோர் வெறுப்பதுவும் சால்பென் றறிந்தனமே

நாசிக்குள் ஓடுகின்ற வாயுப் பிராணன் ஒன்று - (புனித) மூக்கிற்குள் (புகுந்து) விரைந்து வெளிவரும் பிராண வாயு போய்ப் பொருந்தும்படி;

மடைமாறி - (திருக்கதவான புருவத்தைத் திறந்து, அப் பிராண வாயு கீழிறங்காதபடி) வழிமாற்றி மேலேற்றி;

யோசித்து - (பிராண வாயுவுடன் அபான வாயுவையும்) ஒன்று சேர்த்து;

[*யோசித்தல் - வடசொல்; உறவு படுத்தல் என்பது குறிப்பு.*]

அயர் உடம்பை நேசித்து - அம் முயற்சிகளால்) அயற்சியை அடையும் ஆக்கையைப் பெரிதும் அபிமானித்து;

உருது அலைந்து - (ஆவலித்த நிலையை) அடையாமல், (இறுதிவரை) அலைமோதி யிருந்து;

உரோமத் துவாரம் எங்கும் உயிர் போக - (உடம்பில் உள்ள) மயிர்க்கால்கள்தோறும், ஆவியாகிப் பிராணன் (சிறிது சிறிதாக) அகல; [*உயிர - உயிர்ப்பு; சுவாசம்.*]

யோக சமாதி கொண்டு - (ஹட)யோக வழியில் சமாதி கூடி;

மோகப் பசாசு மண்டு லோகத்தில் - (பாழும்) மோக அவஸ்தை(கள் ஆகிய) பிசாசுகள் படபடக்கும் (நியதியற்ற இந்த) நிலவுலகில்;

மாய்வது என்றும் ஒழியாதோ - தேய்ந்து சீரழியும் நிலை என்றும் தீராதோ, (எ-று.)

விரிவுரை.

அக்கிரமத்திற்கு அரண் செய்வேன்; என்னைத் தடுக்க எவராலும் முடியாது என்று, கருவி யிருந்தது கடல். அங்

நூலறிவு மிக்கும், நுடங்கி முடங்குனரை,
வாலறிவன், காலத்தில் வாய்மையராச் செய்வானே

நாளில் அதை அறிந்தீர். இருள் மயமான கடல் இல்லாது போக, ஒளி மயமான வேலை ஊக்கினீர், உடனே உக்ரம் மிக்க வேல், உள்ள நீரை எல்லாம் உறிஞ்சியது. அவ்வளவில், ஆர்கடலின் இறுமாப்பு அடங்கியது. ஓதி இவைகளை உணர்ந்து,

'விசப் பயோதி துஞ்சக் கடிந்த கதிர்வேலா!' என்று இதயத்தால் பாடி இறைஞ்சுவம் யாம்.

ஆணவ இருளான சூரன், அகில உலகையும் மடக்கி அடக்கினன். பாவத்திற்குத் தக்க படைபபு; புண்ணியத்திற்கு உரிய சிருட்டி. இவைகளைச செய்பவர் பிரமதேவர். நான்கு வாய்களாலும் அவர், ஓயாது மறைகளை ஓதுபவர். அசுர ஆட்சியில, படைப்பும் தடைப்பட்டது; ஓதும் வைதிகமும் ஒழிந்தது; அதனல், வேத தருமம் வீழ்ந்தது. அறிவின் ஒளி நிலைகுலைய, அஞ்சி நான்முகா அலறினர்.

அதை அறிந்தீர். ஞான ஜோதி மயமான ஏக வேலை ஏவினீர், அதனல் சூரன ஆட்சி சுருண்டது. அதன்பின், பயனுன அருள் ஒளி எங்கும் பரவியது. இந்த இரு வரலாறு களாலும், 'வேலுண்டு வினையில்லை' எனறு உணாநது உலகம் உய்ந்தது.

'வேதக் குலாலன் அஞ்ச, மேலிட்ட சூர் தடிந்த கதிர்வேலா!' என்று, உம்மைப் புந்தியில் உணர்நது அடியேம் புளகிப்பம்.

எந்த அம்பும் உடலில் ஊடுருவும்; ஒன்று யிருந்ததை இரண்டாய்ப் பிளக்கும். இதற்கு மாறுக, தனிததனி இருந்த இருமையை, ஒருமைசெய்வது காமனகணைகளின கைங்கர்யம்.

வீராதி வீரரையும், துறவிகளான சூராதி சூரரையும் வெல்லும் அவைகளின் வீரப் பிரதாபமே பிரதாபம் என்று. அக்கணைகளைப போற்றி புகழ்வர் சில புத்திசாலிகள்.

பேசுவது தத்துவங்கள்; பின்னிழுககும் பித்துநடை;
கூசுவது நெஞ்சம்; குமைகிறது நல்லறமே

'காமத்தால் கனலும் வெந்தீ, சீலத்தால் அவியும்' என்பர் மேலோர். இதை அறியாமையே பெரிய அறியாமை.

" அறிதோ றறியாமை கண்டற்றால் காமம்
செறிதோறும் சேயிழையார் மாட்டு"

என்றார் வள்ளுவர்.

இச் சூழ்நிலையை, உணர்வால் ஊனறி உணரும்போது, புழுங்கிய தம் அறியாமையே புலனாகும் என்பது, இதன் பொருள். பெண்மையில், தெய்வ இயற்கை பெருகியுளது; புத்தியைக் குழப்பிக் கொள்ளாதவர்க்கு, பூவையரில் புனித சிவை புலனாவள். இந்தச் சாதனை செய்யாமல் வெறும் ஆக்கையின் சாயை கண்ட ஆண்மை, அவநினைவில் பெண்மைக்கு அடிமை ஆய்விடும். அவர்கட்கு இதுதான் கதி என்று அறிவிக்க,

'வீரப்ரதாப பஞ்ச பானத்தினால் மயங்கி
வேடிச்சி காலில்'

விழுவதே போல், ஆடல் காட்டிய உமது அருளே அருள்.

அபராத செயல்கள் அளவிறநதன. அவைகளுள் மிகப் பெரிய அபராதம் சிவாபராதம். அருள் நூற்கட்குச் செய்யும் விபரீதமான வியாக்கியானங்கள், சிவநிந்தை, அடியார்களை அவமதித்தல் முதலியன, அளவிறந்த பாவம் ஆகும். அவைகளைச் செய்பவர்கள், எவ்வளவு சிறந்தவர்களாயினும், என்றும் ஆட்டுத தலையராகி அவதி யடைவர். அரிய இந்நுட்பத்தை எவர்க்கும் அறிவிக்க, மாமன் என்று மதிப்புக் கொடாமல், தக்கன் தலையைச சிவனார் தள்ளினர்.

காம வெகுளி மயககம் போல், முப்புர அவுணர்கள், ஒருகாலத்தில், மோசமாக நல்லோரை மோதினர். சீர்கெட்ட

ஆஸ்திகமே பேசி, ஆகா தனசெய்து,
நாஸ்திக வித்தூன்றும் நாகரிக நாளிதுவே

அச்செயல் கண்டு சிரித்தார் சிவபிரான். சிரிப்பில் எழுந்த நெருப்பால், கோலமான முப்புரங்கள் கூளம் ஆயின.

வளர்த்த தவத்திற்குத் தக்க வாழ்வு; விளைத்த பாவத்திற்குத் தக்க வீழ்வு. வாழ்வின் தலையெழுத்து வா; வீழ்வின் தலையெழுத்து வீ. அம் முதல் எழுத்துக்களே, அவரவர் அடையும் கதியை அறிவிக்கின்றன.

அனுபவத்தில் இவைகளை அறியுமாறு செய்த சிவனார் தந்த செல்வர் நீர். அந்த அருமையை அறிந்தே,

'கூசிப்புகா ஒதுங்க மாமன் திகாது அரிந்த
கூளப் புராரி தந்த சிறியோனே !'

என்று, குவித்த கைகளால் உம்மைக் கும்பிடுவம்.

சூர பதுமனைத் தடிந்த போது, அவனது ஒரு உடலில் இருந்து இரண்டு உயிர்கள் எழுந்தன. மாபெரும் சூர உயிர், மயில் உருவம் கொண்டது. அதை ஊர்தியாக்கி அடக்கினீர்.

பதும உயிர், இரவும் பகலும் இச்சை மயமாகி, கொக்கொக் என்று கொகரிக்கும் கோழி உருவம் கொண்டது. காம கண்டனர் ஆன நீர், கோழியின அறிவைத் திருத்திக் கொடியாக்கிக் கொண்டீர்.

கோடை வெயில் போல், குறுகுறுத்த உயிர் வாழ்க்கையில் கொதிப்பேறுகிறது. அத் தாபம் தவிர்த்து அவர்களை ஆட்கொள்ள, கோடை எனும் அரிய ஒரு தலத்தை அமைத்தீர். நிழல்தரு தருவைப் போல், இனிதாக அங்கு எழுந்தருளியிருக்கின்றீர்.

'கோழிப் பதாகை கொண்ட கோலக் குமார கண்ட
கோடைக்குள் வாழ வந்த பெருமாளே'

எவருள்ளும் ஒரு தீபம் இருக்கிறது. அதைப் பலர் அறிந்திலர். தக்கவர் மொழிகளில், அதன பிரகாசம் தவழ்ந்து

உண்மை உணர்வு ஒதுங்கிப் புறஞ்செல்லின,
பண்ணும் செயலனைத்தும் பாழாகும் நிச்சயமே

வரும். மந்திரங்கள் என்று மதிப்படையும் அவைகளை, 'சொல்லக விளக்கு' என்று சொல்வர் மேலோர்.

இல்லத்தில் ஏற்றுவது 'இல்லக விளக்கு.' பரிதி, மதி, விண்மீன் முதலியவைகள், 'பல்லக விளக்கு' என்று படிக்கப் பெறும். ஐம்பொறிகள், அந்தக் கரணங்கள், ஆன்ம போதம் எனும் எல்லா விளக்குகளிலும் இருந்து ஒளிர்வது, தீபமான அவ் விந்து தத்துவம். சிவதத்துவம் என்று, இது சிறப்புப் பெயர் பெறும்.

அரிய இத்தீபத்தைத் தரிசிக்க ஆவலிப்பம். அது கருதிவைகறையில் எழுவம். கடனை முடிப்பம். அன்பொடு நீராடி அனுட்டிப்பம்.

'எழும்போதும் வேலும் மயிலும் என்பேன், எழுந்தே மகிழ்ந்து
தொழும்போதும் வேலும் மயிலும் என்பேன், தொழுதே உருகி
அழும்போதும் வேலும் மயிலும் என்பேன், அடியேன் உடலம்
விழும்போதும் வேலும் மயிலும் என்பேன் செந்தில்
வேலவனே'

என்று பண்புடன் இருந்து பாராயணம் பண்ணுவம். அதன் பின் ஆறு எழுத்தை, ஓசை செய்யாமல் உருவேற்றுவம்.

இந்த ஈடுபாடு தொடர்ந்து நடைபெற, சித்கனல் பெருகிச் சிலிர்க்கும் விந்து தத்துவம் தீபமாய், மின்னலாய் வெளிப்பட்டு விளங்கும். அந்த ஒளியை ஊடுருவி, ஓங்கார நாதம் உதிக்கும். நாசி வழியாக ஓடும் சுவாசம், அந்த நாதத்தில் ஒடுங்கும். இதுதான் சிவராஜ யோகம் எனும் சிறந்த நெறி.

தவறாமல் இச் சாதனையைத் தழுவினர்முன், என்றோ ஒருநாள் நீர் எதிர்ப்படுவீர். உத்தம தகராலய ரகஸ்யத்தை உபதேசிப்பீர்.

இதயமுறு தீபம் இழிந்தழியா வண்ணம்,
மதிநலத்தைக் காக்கும் மரபு மறந்ததுவே

'சந்த்ர சூரியர் தாமும், அசபையும்,
விந்து நாதமும், ஏக வடிவம், அ
தன் சொரூபம தாக வுறைவது சிவயோகம்'

என்ன அருமையான செய்தியிது. இதை அறிவாரும் இல்லை; அறிய முயல்வாரும் இல்லையே !

இதற்கு மாருகக் கற்பது. இறுமாந்து இருப்பது. விபரீத வியாக்கியானங்களை விரிப்பது. அகமும் புறமும் அழுங்குவது. வீணுக மத விரோதங்களை விதைப்பது. விந்து தத்துவம் என்பது, உடம்பில உள்ள வீரியந்தான என்று புத்திக்குத் தககவாறு பொருள கொள்வது அதை விருத்தி செய்ய முயல்வது. அட பாவமே !

ஆனமாவிறகு வழிகாட்ட, எந்த உடம்பிலும் ஆறு ஆதாரங்கள இருககினறன. முதல் ஆதாரம், மூலாதாரம் எனப்பெறும். மேனமையுள பிராண வாயு, அதனில் இருந்து மேல எழும். சிறநத புருவ நடுவரை செல்லும்; புருவக் கதவு பூட்டி இருததலால, ஏறுமுகம் கெட்டு இறங்கும்; எதிரில் உள்ள நாசித் துவார வழியாக, வெளிப்பட்டு வீணே விரையம் ஆய்விடும்.

சிவராஜ யோக வழியில் சிததம் லயபபடில், மனோன்மணி திருவுளம் இறங்கிக் கதவை திறப்பள். அங்ஙனம் இன்றிக் கீழிறங்கும் அபானனையும், மேலேறும் பிராணனையும் இணைத்து, இரண்டினையும் சுழுமுனை வழியே முரட்டுத் தனமாக மோதவிடுவது, ஹடயோக முறை. அந்த முடடுதல் தாஙகாமல், புருவக் கதவம் திறந்து விடும். வழி திறநததும், பிராண அபானன, கபாலததில சென்று கலக்கும்.

தன்பெருமை தானுயரத், தாவி யழிவுசெயும்
மன்சிறுமைப் போக்கு, மதிமருட்டு கின்றதுவே

இம் மோதலில், சில சமயம் மண்டை வெடிக்கும்; செவிகள் இரண்டும் செவிடுபடும்.

'விந்து ஜோதி விளங்கும். அங்கிருந்து அமுத மழை பொழியும். காணலாம்; உண்ணலாம். உய்யலாம்' என்ற நிலைமாறி, விபரீத அனுபவங்களே விளைவாகும். கும்பித்த பிராணனும், உடம்பில் உள்ள மயிர்க்கால் தோறும், சில்லிக் குடத்து நீர்போல் சிதைந்துவிடும்.

அசுர முறையான இந்த ஹடயோக சமாதியில், ஆவது ஒன்றும் இல்லை.

"அநித்தமான ஊன் நாளும் இருப்பதாக வேநாசி
அடைத்து, வாயு ஓடாத வகை சாதித்து,
அவத்திலே குவால்மூலி புசிதது, வாடும் ஆயாச
அசட்டு யோகி" ஆகலாமா?

கற்றவரும், மதவாதம் வளர்ப்பவரும், ஹடயோகம் உற்றவரும், வாழலாம் பலகாலம்; புகழை வளர்க்கலாம் என்று எண்ணி முயன்று, அறிவிலாத் தம் வழியை மற்றவர்க்கும் அறிவிதது, அவர்களும் அழிநது, தாமும் ஒழிந்து போகின்றனரே!

"துருத்தி எனும்படிக் கும்பித்து வாயுவை, சுற்றி முறித்து
அருத்தி உடம்பை ஒருக்கில் என்னும்; சிவயோகம் எனும்
குருத்தை அறிந்து, முகம் ஆறுடைக் குருநாதன் சொன்ன
கருத்தை, மனத்தில் இருத்தும் கண்டீர்; முத்தி
[கைகண்டதே"!

என்று எவ்வளவு சொன்னலும், எவர்க்கும் தெரியவில்லையே! எதனிலும் வழிமுறை தவறிய வாழ்வு; இவ்வளவுதானு உலகம்! ஒவ்வொருவர்க்கு ஒவ்வொன்றில் மோகம்.

நுணுகி யுணர்ந்து, கற்ற நூல்வழியில் நின்று,
அணுகிமன சாட்சியில் அனபுகொள வேண்டாவோ?

அந்த மோகப் பிசாசு, ஒவ்வொருவரையும், அவரவர் தரத்திற்கு தக்கவாறு மயக்கி, இறுதியில், அவரவர் வழியிலேயே அவரவரை இறுக்கி நெருக்கி இறக்கச் செய்கிறதே!

ஞானஒளி வேல் இறைவா! உமது திருவடியை சித்தததிற் பதித்து சிந்திக்காமல், அவதி மரணத்தை உலகர் அடைவது தீராதோ? என்றும் தீராதோ? என்றுமே தீராதோஒஒ என்று விம்மி யழுது விண்ணபபித்தபடி.

வாழ்க திருப்புகழ் வளம்.

ஓம்.

---

9. தென்னுட்டுத் தலதரிசனம்

[திருவண்ணு மலையினின்றும் சிதம்பரம்வரை]

[திருப்புகழ் எண்கள் வ. சு.—பதிப்பின்படி]

(தணிகைமணி. வ. சு. செங்கல்வராய பிள்ளை. M. A.)

அண்ணுமலையை வலஞ்செய்து 'செய செய' என்று கைகூப்பித தொழுது "வேலுமயிலுந் துணை" என்று வழி நடநதார்.

முதலில் திருக்கோவலூரில் (1) வந்து சேர்ந்தார். திருக்கோயிலுக்குச் சென்ருர். ஆலயத்தை வலம்வந்து சந்நிதியில் வீழ்நதெழுந்து காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி "பாவகாரிகள்" எனத தொடஙகும் திருபபுகழைப (738) பாடி. அப்பதிகத்தில் மறையோர் மறையோதும் ஒலி, விழா ஒலி, ஆகம ஒலி, இவை மிக வீறுகினற மாநகரமென்று அத்தலத்தைச் சிறப்பிததுப் பாடினுர்.

---

* பள்ளிச் சிறுர்போல படபடத்துத், தப்புவழி
துள்ளி விழுந்தால், துயரந்தான் மிச்சமரோ

திருவெண்ணெய் நல்லூரில் நடன தரிசனம் பெற்றது :

பின்னர், சிவபெருமான் சுந்தரரை வலிய ஆட்கொண்ட தலமாகிய திருவெண்ணெய் நல்லூருக்கு (2) வந்து சேர்ந்தார். திருஆலயம் புகுந்து கலகல எனச் சதங்கை ஒலித்திடக் குழந்தை முருகன் அற்புத மயில்மிசை திருநடனமிட்டுத் தரிசனம் தருவதைக் கண்டு களித்து, அவர் இளையோனுய் "சித்திரப்புலவன்" என விருதுபெற்றுச் சமணரைக் கழுவில் ஏற்றியதைச் சிறப்பித்தும், கிழவனுக லீலைசெய்து சுனைநீர் விரும்பி, ஆனையை வரவழைத்து வள்ளியை அணைந்த திருவிளையாடலைப் புகழ்ந்தும், 'பலபல தத்துவம்' எனத் தொடங்கும் திருப்புகழைப் (748) பாடித் 'திருவெண்ணெய் நற்பதி புகழ்பெற அற்புத மயிலின் மிசைகொடு திருநட மிட்டுறை பெருமாளே' என அப்பாடலை முடித்து மகிழ்ந்தார்.

பின்னர் அங்கிருந்து திருநாவலூரை (3) அடைந்து தம்பிரான் சந்நிதியிற் சென்று 'கோலமறை' என்னும் திருப்புகழைப் (747) பாடினர்.

அதன்பின்னர், அப்பர் பெருமான் திருத்தலமாகிய திரு ஆமூரை (4) அடைந்தார். அங்குத் தாம் பாடிய 'சீத மதியம்' எனனும் திருப்புகழில் (744) அப்பர்க்கு முன் வந்த திலகவதி அம்மையாருடைய மேதக்க புகழை வியந்து ஓதினர்.

பின்பு, வடுகூரைத் (5) தரிசித்து மாதர் விஷயமே வராத 'அரி அயன்' என்னும் திருப்புகழைப் (745) பாடி,

அங்கிருந்து திருத்துறையூரை (6) அடைந்து 'ஆர்த்தன' மென்னும் திருப்புகழைப் (746) பாடி 'சிவகுருநாதனே' என்று முருகவேளைப் புகழ்ந்தோதினர். அத்தலத்தினின்றும்

சிற்றெறும்பின் தானியத்தைச் சீறரவம் பற்றல்போல்,
எற்றுகின்ற பாவத்தால், ஏமாந்து போகோமே

சிவபிரான் திரிபுரம் எரித்த தலமாகிய **திருவதிகையை** (7) அடைநது திருக்கோயிலை வலம்வந்து முருகவேளின் சந்நிதியில் இரண்டு திருப்புகழ் 'பரவுவரி' (742); 'விடமும் வேலன' (743) பாடி, 'திரிபுரம் எரிசெய்த அதிகை மாநகர்' என அத்தல விசேடத்தைக் கூறி, இறைவனே! "நின ஆறிரு புயம் என உரைசெய அருள்வாயே" என வேண்டினர். மேலும், 'பரவுவரி' (742) என்னும் பாடலில் ஆற்று வெள்ளம் பெருகிவருதலைப் பறை அறைவித்து முனனதாக ஊராருக்குத் தெரிவிக்கும் அக்கால வழக்கததை "திமிதிமெனப் பறையறையப் பெருகுபுனற் கெடிலநதித் திருவதிகைப் பதிமுருகப் பெருமாளே" எனனும் ஈற்றடியில் விளக்கியுள்ளார்.

பினனர் அங்கிருந்து பெண்ணை ஆற்றங் கரையிலுள்ள **திருப்பாதிரிப்புலியூரை** (8) அடைந்து ஆலயத்தில் வீற்றிருக்கும் கநதவேளைத் தரிசித்து, 'நிணமொடு' என்னும் பதிகத்தைப் (749) பாடி, அதில சூரியனை விலக்கிய மதில்களைக் கொண்ட இலங்கை அதிபனைத் திருமால் வென்ற வரலாற்றைக் கூறி, தேவி இறைவனை நோக்கி அரியதவஞ் செய்த புண்ணியதலம் அது என விளக்கிப பெருமானே! 'ஞானமறை உபநிடதம் அதனை விளஙக நீஅருள் புரிவாயே' என வேண்டித் தமது கருத்தினை வெளியிடடுள்ளார்.

இததலத்தை விட்டகன்று **திருமாணிகுழி** (9) என்னும் தலத்தை அடைந்து, அததலத்திற் குரஙகுகள் கமுக மரங்களில் ஊடாடி அம்மரங்களின் தாறுகள் அறுபட்டு வாழைக்குலைகளின்மேல் விழும்படி விளையாடுவது முதலிய இயற்கை வர்ணனைகளை விளக்கி, "மதிக்குநேர்" என்னும் பதிகத்தைப் (750) பாடினார். மேலும் அப்பாடலில் நாம் தியானிக்க வேணடியவை இவை இவை என ஒரு குறிப்புத் தந்துள்ளார்.

பத்தி நெறியைப் படிப்படி யாவளர்தத
உததமரை, ஞாலம் ஓதுக்கிவிடும் நிச்சயமே

அவைதாம் 1. நூபுரம் சூழ்ந்துள்ள சீபாதமலர் 2. படைக்குள் ஒன்றாகியசீரா (உடைவாள்) 3. ஒளிகொண்ட பன்னிரு தோள்கள். 4. பன்னிரு தோடுகள் விளங்கும் காதுகள். 5. பாம்பை அடக்கும் மயில். 6. வேல். 7. சேவல. 8. சூலம். *நீண்ட வில்லைப் பிடித்த அவரது வெற்றி.

[*முருகருக்குச் சூலமும், வில்லும் உண்டு. ''சூலம் வாள் தண்டு செஞ்சேவல் கோதண்டமும் சூடுதோள்''—திருப்புகழ் 35. நெய்வேலியில் முருகர் விற்பிடித்த கோலத்துடன விளஙகுகின்றார்.]

திருமாமணி குழியினின்றும் புறப்பட்டுப் பூமியில் சிறப்புற்ற தலஙகளுக் கெல்லாம் மேலான தலமென்று யாவரும் கொண்டாடும் சிதம்பரத்தை (10) (தில்லையை) அணுகினா.

தில்லையில் நடனதரிசனம் பெற்றது :

சிதம்பரத்துப் பெரிய திருக்கோயிலை வலம் வந்தார். கரியுரி தரிதத பெருமானும, அவரது இடபபாகததில் விளங்கும் சிவகாமி அம்மையும் களிப்புடன் கண்டு மகிழ, 'அரிதரிது' எனப் பதஞ்சலி வியாக்ரபாதர் வியக்கத், தம்முன முருகவேள் தந்த பலவித நடன கோலஙகளைக் கண்டு, கைகளும் தலைமீ தேறக் கண்ணில் ஆனந்த வெள்ளம் பெருக ''கனக சபை மேவு எனது குருநாத கருணை முருகேசப பெருமாள் காண்'' (590) எனவும்,

' அரிதுயில் சயன வியாள மூர்த்தனு(ம்)
அணிதிகழ் மிகுபுலி யூர்வி யாக்ரனு(ம்)
அரிதென முறைமுறை யாடல் காட்டிய பெருமாளே (650)

எனவும் பாடி மகிழ்ந்தார். பின்னர் தாம் பாடிய திருவகுப்பிலும் இக் காட்சியை—

சீர்கெட்ட ஞாலச செயலகடமைச் சிநதித்து,
வேர்த்து மனம்வருந்தும் வித்தகரும் உள்ளனரே

" முதலி பெரியம்பலததுள்
வரை அசல மண்டபத்துள்
முனிவர்தொழ அன்று நிர்த்தம் ஆடினன் "

எனக் குறித்துள்ளார். (கடைக்கணியல் வகுப்பு)

பின்னும் திரு அண்ணுமலையில் மூலை முடுக்கில் இருந்த முருகர் திரு உருவங்களைத துதிததது போலத் தில்லையிலும்-பல இடங்களில் இருந்த முருக மூர்த்தியைப் புகழ்ந்து பாடினர்.

தெற்குக் கோபுர வாசலில் மேவிய பெருமாளே; மேலைக் கோபுர வாசலில் மேவிய பெருமாளே; வடக்குக் கோபுர வாசலில் மேவிய பெருமாளே; நாலு கோபுர வாசல் மேவிய பெருமாளே என்றெல்லாம் புகழ்ந்து பாடித் துதிததனர்.

சில நாள் அத்தலத்தில் தங்கிப் பலவகைச் சந்தங்களில் திருப்புகழ்ப் பாடி மகிழ்ந்தார். நடராஜப் பெருமானே முருகராகவும், முருகபிரானே நடராஜ மூர்த்தியாகவும் சற்றேனும் பேதமின்றி இவருக்குத் தரிசனம் கிடைதத காரணததால் 'மலைமகள் உமைதரு வாழ்வே மனோகர' என குகனைக குறித்தும், திரிபுரம் எரிசெய்த கோவே நமோ நமோ எனச் சிவனைக் குறித்தும், கலம்பகமாக வருகின்ற " அவகுண விரகனை " என்னும் பாடல் (611) இவர்தம் திருவாக்கினின்றும் எழுந்தது. தில்லை நடனத் தலமாதலின் கலகல என்றும்; கணகண என்றும்; கிண்கிண் எனறும் சிலம்பொலி, தாள ஒலி, நடன ஒலியாம் இவை இவரை பரவசப்படுத்தின காரணத்தால் அற்புதகரமான சந்த பேத ஒலிகளைக் கொண்டனவாய்த் திகழ்கின்றன. சிதம்பரத்துத் திருப்புகழ்ப் பாக்கள் 1307 பாடல்களுக்கு உள்ள 1008க்கு மேற்பட்ட சந்த பேதங்களிற் சிதம்பரத்திற்குரிய 65 பாடலகளில இரண்டு பாடல்கள் தவிர ஏனைய 63 பாடல்கள தனிததனிச சந்தங்களால் அமையப்

சாவித்ரி வேடத்தைச் சால்பில்லார் தாஙகலபோல,
பாவப் பயில்வினரில் பஞ்புருடிப் புள்ளதுவே.

பெற்று விளங்குகின்றன. புலியூர்; புலிசை; புலிச்சுரம்; கனகசபை - கனகம்பலம் - பொன்னம்பலம் - திருச்சிற்றம் பலம் - திரு அம்பலம் - சிதம்பரம் - மன்று - தில்லை - பெரும் பற்றப் புலியூர் எனத் தில்லையின நாமங்கள் யாவும் அவர் பாடலில் வந்துள்ளன. 'தில்லைவாழ் அந்தணர் சிறப்பு (625), சிவகாமி அம்மையின் திருநாமம் (597), சிவகங்கை தீர்த்தம் செந்தமிழ் ஞான தடாகம் என்பது (609), சிதம்பரம் ஞானபூமி என்பது (639), முருகன் செட்டி வடிவொடு வள்ளியுடன் லீலை புரிந்தது (612), மணிவாசகர் அருள் பெற்றது (653), வேல் பஞ்சாட்சரமே என்பது (606), சம்பந்தப் பெருமான் ஞானவாளால் சமணரை வென்றது (650) முதலான அரிய விஷயங்கள் இத்தலத்துப் பாடல்களிற் காணலாம். இவற்றின் விரிவு யானெழுதியுள்ள 'அருணகிரிநாதர் வரலாறும் நூலா ராய்ச்சியும்' எனும் நூலிற் காணக் கிடைக்கும்.

சமரசம் 25

யாரிவர் அறியோம்.

(அன்பன்.)

எங்கும் நிறைந்த காரணத்தால், பெருமான் இறைவன் எனும் பெயர் பெறுவன். மண்ணில் பிரமன். நீரில் திருமால். நெருப்பில் ருத்ரன. காற்றில் மகேசன். விணணில் சதாசிவம். இந்த ஐந்து பூத தத்துவங்களில் சொருப இறை, மேற்சொன்ன மூர்த்தங்களாகி மூர்த்திகரிக்கும். தொன்மைத் தததுவங்கள் தொண்ணூற்ரூறு. ஒவ்வொன்றிலும் உயிரா யிருந்து, சொரூபம் பல உருவங் கொண்டு விளையாடும்.

இன்பம் இறையருளால் எய்தும்; இதையறியார்
துன்பை வருவிக்கும் சூழ்நிலையில் தோய்வாரே.

உடல்கள் ஒவ்வொன்றும், கூடிய அத் தத்துவங்களின் கூட்டந்தான். முன்னைய பிறப்பில் மோந்து உணர்ந்து இருந்த ஒரு தத்துவம், அடுத்த பிறப்பில், விறுவிறுத்துச் சிறிது விளங்கும். அத் தததுவத்தில் அமர்ந்திருக்கும் அருள் மூர்த்தம், தனிப்பெரும் உணாவிற்குத் தரிசனம் தரும். விளங்கும் அவ்வுருவினிடம், ஆன்மா விநயம் காட்டும். விநயம் வழிபாடாகி விளையும். அதன் பயனாக, அறிவின் இருந்த இருள் சிறிது சிறிதாக அகலுமாறு, உதய பூதி உருவாகும்.

தத்துவங்களின பல மூர்த்தி பேதங்கள், அவரவர் அறிவின் தரத்திற்குத் தக்கபடி, கருமேனி கழிக்க வந்த கருணையின் காரியங்கள். "அடியேன் அறிவு அளவிற்கு அளவானது அதிசயமே" எனும் அபிராம பட்டரை இங்கு எண்ணல் நலம். இதை அறியாமல், இந்துக்கட்கு ஏராளமான தெய்வங்கள் எனறு ஏளனிபபவர், அமைதி சமய நுட்பம் அறியாதவர்.

பசி ஆற உண்பவர் எவரும், எதையும் ஒவ்வொன்றுகச் சுவைத்து உணர்பவர். அதுபோல் ஆன்மப் பசியால் ஆராதிப்பவரும், தம் தரத்திற்குத் தக்க மூர்த்தங்களை வழிபாட்டில தழுவுவர். இதுதான் ஆஸ்திக தர்மத்தில் உள்ள அரிய ரகஸ்யம். தரம் உயர உயர, தத்துவங்களை முறையே தாண்டி, அவைகட்கு அப்பாற்பட்ட சொரூபம் எம் சொந்த நிலம் என்று உரிமை கொண்டாடும் உயிர்.

அரிய இந்த அனுபூதி யடைந்த பெரியவர்கள், வளர்ச்சிகட்குரிய வழிகளையும், அஙகங்குத் தரிசனமான தூய தெய்வத் தோற்றங்களையும், அவைகள் அருளிய வகைகளையும், அதனுல் விளைந்த பயன்களையும், அருளொடு எவர்க்கும்

புறக்கோல வாழ்க்கையில்,புண்ணியங்கள் தேய்ாதுவிடும்;
திறக்கோல நன்னெறியில் தெய்வம்விளை யாடுமரோ.

அறிவித்துளர். அவைகளே அனுபவஞான அருள் நூற்கள். அந்நூற்களில் உள்ளவை, பூசித்தற்கு உரிய புனித செய்திகள்.

அவைகளை ஓதுவது இல்லை. ஓதினாலும், உரைகாண விரும்பும் அளவு உணர முயல்வது இல்லை, முற்றும் உணர்ந்தது போன்ற முனைப்பு வேறு. இங்கிலையினர், சாதிச சண்டையை எழுப்புவர். சமய சச்சரவில் தலையிடுவர். அரசியலில் குட்டையைக் குழப்புவர். பூர்வாசிரமத்து அசுரர் இவர்கள், எடுத்த இபபிறப்பில் இப்படி ஏதம் பலவும் எழுப்புவர். இவர்கள விரிக்கும் வலையில், பாமரர் வீழ்ந்து ஆழ்ந்து வெம்புவர். இதனால் அமைதியான உலகம் அல்லோல கல்லோலம ஆகும்.

நெருப்பொடு மோதுதல்போல், வேதியர் மேல் துவேஷ புத்தியை விருத்தி செய்வர். ஆரம்பத்தில் அழுகிய விதை, முன்னின்று எத்துணை முயன்றாலும் முளைப்பதுதான் இலலை. அதுபோல் இதய துவேஷம், உணர்வின தூய்மையை ஒழித்து விடும். இங்கிலையர் சமய வாழ்ககையில் சார்ந்தனரேல், அங்கே விளைவது அவதிதான். தாலீபுலாக நியாயம் பற்றி, இரண்டொன்றை மட்டும் இஙகு எண்ணலாம்.

பன்னிரண்டு இடததில் திருமண் தரித்துளர் ஒரு பாகவதர். கழுததில் துளசிமணி, கோவிந்த கோவிந்த எனற குரல் அவரில கொஞ்சும். கோலததாலும் குரலாலும் அவரைக கும்பிடலாம் எனற எணணம் எழுகிறது. இங்கிலையில, வெறுததற்குரிய அவர் கொள்கையோ, விரையமான சொற்களாகி வெளிப்படுகினறன. பேசுகிறார் பாகவதர்.

கேளுஙகள்! நலம் சிறந்த கருடசேவை நன்மை அளிக்கும். புனித அதன் குரல் கேட்பது புண்ணியம்.

அறிவுதனைத தீட்டி, அடுக்காத செயவார்
உறவு கொளின், வாழ்நாளில் ஓயாத துன்புறுமே.

அந்தக் கருடன் மேல் அமர்ந்து வருபவர், எங்கள் ஆதி மாதவர். பெரும்பணி செய்யும் கருடாழ்வார்க்கு, பெரிய திருவடி என்று பெயர்.

மாருதி தநயர் ஆஞ்சநேயர். ஒன்பது வியாகரணங்களை அவர் ஓதி உணர்ந்தவர். அவர் இராம பக்தர். சிவ பெருமான் அநுமானாக வந்து, அல்லும் பகலும் பணிபல செய்து, பிராட்டியைப் பெருமாளுடன் சேர்த்து, என்றும் இருக்கும் பேறெய்தி, சிறிய திருவடி எனும் சிறப்புப் பெயரும் பெற்றனர்.

சுடலையை எய்தி, சாம்பலைப் பூசி, தலைகளை எலும்புகளை மாலையாகத் தரித்து, பேயுடன் ஆடிய பழியும் பாவமும் பெயர்ந்தழிய, தடசிணா 'மூர்த்தியாகி, இன்றும் திருமாலை எண்ணும் தவத்தில் சிவனார் இருக்கின்றார். இந்த அனுபவத்தை, கண்ணுதல் ஆலயத்தில் இன்றும் காணலாம்.

ஆவாகி, அதன் கனருகி, அந்தர்யாமியாகி, ஹரனார் ஏந்திய கரத்தின் அம்பாகி, பொல்லாத அவுணர்கள் புத்தியைக் குழப்பப் புத்தராகி எங்கள் பெருமான் உதவிலரேல், இருந்த முப்புரத்தைச சிவனார் எரிக்க முடியுமா ?

சக்கரத்தை வழிபட்ட சங்கரர்க்கு, நாராயணர் அரிய சூலம் ஒன்றை அருளினார். அண்டத்தைத் திருமால் உண்ட போது, வரதர் திருவயிற்றில் சிவனார் வாழ்ந்திருந்தார்.

நானே தெய்வம் என்று கொட்டம் அடித்தான் இரணியன். தாமே தெய்வம் என்று அறிவிக்க, அத் தாமோதரர் நரசிங்கமாகி அவனை அழித்தார்.

எங்கள் பெருமாள் எவர்க்கும் படியளப்பவர். அதைத் ததியோதனம், புளியோதரை, அக்காரடிசில் முதலியன

அறநெறியிற் காலூன்றும் ஆண்மை யுடையோர்,
திறமாரும் வாய்மைத் திருவைவிளைக் கின்றாரே.

சந்நிதியில் அளிப்பது கொண்டு அறியலாம் என்று, விரிவுரையாற்றினர் அந்த வீர வைணவர்.

வைதிக சைவர் ஒருவர் வழியே போகிறார். அவர்க்கு, வைஷ்ணவர் சொற்கள் காதில் விழுந்தன. அவர் இதயம் பதைத்தது ; கொதித்தது நெஞ்சு. சொற்களால் குமுறினார்.

காஞ்சியம் பதியில், ஏக ஆம்பரர் இருக்கிறார். வாழ்த்தி அவரை வழிபட, வரதர் வந்தார். புனித சந்நிதியுள் புகுந்தார். கர்வம் தலைக்கேறிய கருடன், நிமிர்ந்த செருக்குடன் வாயிலில் நின்றான்.

அவன் மனநிலையை நந்திதேவர் அறிந்தார். வெதும்பிப் பெருமூச்சு விட்டார். காற்றான சுவாசம், கருடனைத் தள்ளி, உயங்குமாறு நெடுந்தூரம் உருட்டியது. அடுத்து நந்தியெம் பெருமான், ஏகாகர சித்தராய், உறுத்துச் சுவாசத்தை உள்ளுக்கு இழுத்தார். அதன் வழியே கருடனும் இழுபட்டு, எலும்புகள் உடைபட உருண்டு கதறினன. விவரம் அறிந்த திருமால், விநயம் பெருக்கி வேண்டுதல் செய்ய, வீரிட்ட கருடனுக்குச் சிவபிரான் விடுதலை அளித்தார்.

இரண்டாவது செய்தியில், உருத்திரரே அநுமார் என்ற கதை, எங்கும் வானமீகத்தில் இல்லை. 'உருத்திரன் அங்கிசன் அநுமான்' என்று கம்பரும், அதையே தழுவி ராம நாடகக் கீர்த்தனமும் அறிவித்தது உண்டு.

அங்கிசன் என்பது, அம்ச அளவுதான். வீரத்தால் வெற்றி பெறும் எவரையும், ருத்ராம்சர் என்பது இலக்கண மரபு. இதை அறியாமல் சிவனே அநுமார் என்பது தவறான செய்தி. சஞ்சீவி மலை கொண்டு வரச் சென்ற அமயம், கயிலையைச் சேவித்து, வாயு தநயன் சிவத்தைத் துதித்த

சமைந்தமைந்த சால்பே சமய(ம்;)அது தன்னில்
அமைந்தார்கள் உய்ந்தார், அருள்பெற்றார் கண்டீரே.

செய்தியையும் எண்ணினால், அநுமானைச் சிவமென்பார் அவமதிப்படைவர்.

மூன்றுவது செய்தியில், சிவத்திற்கு யோகம் போகம் கோரம் எனும் மூன்று திருமேனி உண்டு. யோக வடிவை, தட்சிணு மூர்த்தம் என்று அறிந்து கொள்பவர் அறிவுடையோர். அது திருமாலை நோக்கித் தவம்செய் நிலை என்று கூறுபவர் அகங்காரிகள்.

நான்காவது செய்தியில், புரத்தை எரிக்கச் சிவனூர் புறப்பட்டபோது, வானவரும் தொடர்ந்து வந்தனர். மேரு வில், வாசுகி நாணி, பூமி தேர், சந்திர சூரியர் சக்கரங்கள், வேத குதிரைகள், பிரம சாரதி என்று யாவரும் இருந்தனர்.

இறுதியில் எவர் உதவியையும் எதிர்பாராமல், நகைத்தார் எங்கள் நம்பர். இருந்த இடம் தெரியாமல், எரிந்தழிந்தது முப்புரம். இவ்வளவு தானே செய்தி. ஏந்த அம்பாகி, ஏற எருதாகி, இடதில் இருக்கும் தேவியாயினர் திருமால். சேவை செய்து சிறப்புற வேண்டும் என்ற எண்ணத்தால், இப்படி எல்லாம் ஆயினர் திருமால. புத்தரான செய்தியைச் சொல்லிப புலம்புகிறீர்கள. சிவ நிந்தையான பித்துக் கொள்ளிப பிரசாரத்தால் ஏறிய பாவம், அவர் தலைமேல், இரும்பு மலைபோலாகி இறுக்கியது.

தாமோதரர், அப்பாவம் தீர சிவதல யாத்திரை செய்தார். உரிய ஒரு தலத்தில் உதவினர் உமாபதி; இரும்பு மலைப் பாரம், பஞ்சுக் குன்றுபோல் இறங்கியது. அத்தலம், திருப்பருததிக் குன்றம் என்ற பெயருடன், இன்றும் தமிழ் நாட்டில் இருக்கிறது.

உப்புமிகில் தண்ணீரும், உண்ணீர் மிகிலுப்பும்,
ஒப்புதல்போல் பேச்சிருப்பின், ஊழுருக்கும் காணீரே.

ஐந்தாவது செய்தியில், கண்மலரால் அர்ச்சித்து, கண்ணன் சக்கரம் பெற்றான் என்பதற்கு மாறாக, எவ்வளவு மோசமான பிரசாரம் செய்கிறீர்கள். இசசை, கிரியை, ஞானமே சூலம் ; அதற்கு அயலாய சிவமில்லை ; சிவத்திற்கு அயலாய் அது இல்லையே. இந்த யோக நுட்பத்தை யோகிகள் அறிவர்.

ஆறுவது செய்தியில், அண்டத்தைத் திருமால் உண்டது உண்மை. எங்கள் சிவபெருமான் பேருருவின் திருமுன், அண்டங்கள் யாவும் பேன் முட்டைகள் போல், அவ்வளவு சிறியன ஆகிவிடும். அவைகட்கு அதீதன எனலை அறிந்து கொள்ள, எவ்வளவு தவம் செய்திருககு வேண்டும் தெரியுமா?

ஏழாவது செய்தியில்: உணவைப பிரதானமாக்கி ஓது கிறீர்கள். வயிறு அளவுதானு வாழ்வு? உலக முழுதும் பூதிமயம் ; அதை உணர்த்துமிடம் சிவாலயம்; மேலும் ஞானக் கனலால், பொல்லாக் களங்கங்கள் பொசுங்கிய நிலையில், உடனுதல் எனும் பொருளுடைய அத்துவித சித்தியையும் அறிவிக்கும் திருநீற்றருமையை, எலலோரும் தெரிந்து கொள்ள இயலுமா ? முசசத்தி சொரூப வில்வதளம், அச்சத்திகள் துணையொடு உம்மில் வந்து ஒன்றுவன் என்பது குறிப்பு.

இப்படியே சைவர் கூற, அதற்கு மாறானவைகளை வைணவர் சொலல, சைவ நலனும் உணரா, வைஷ்ணவ முறையும் புரிந்து கொளாத இந்த இருவர்களும் மோதும் வாதச் சொற்களை முன் வந்து பொறுக்கி, மூட்டை கட்டி வைத்துக் கொள்வர் சில மூர்க்கர்கள்.

ஏ பாபிகளே ! எல்லாத் தெய்வுங்களும், சண்டையிடும் தெய்வங்கள் ; அவைகள் தெய்வங்கள் அல்ல ; சைத்தான்கள்.

எத்தனையோ காலமா ஈட்டியுள புண்ணியத்தை,
உத்தியால் பேசி உருவழிக்க லாகாதே !

எங்கள் கடவுள் இயேசு; ஏசுவார் ஏச்சு அனைத்தையும் ஏற்றுக் கொண்டு, எவரையும் ஏசாதவர் எங்கள் இயேசு பெருமான். கடவுள் என்று ஒருவர் இருப்பாரேல், அவர் இயேசுவாகத்தான் இருக்க முடியும் என்று, வைதிகம் வாழ்ந்த இந்த ஞான பூமியில், உடம்பு கூசாமல், உள்ளம் நடுங்காமல், சிலர் புறச்சமயப் பிரசாரம் செய்யும் பொழுது, சைவ வைணவ வாத முட்டைகளை அவிழ்த்து ஏளனத்திற்குப் பயன்படுத்துகின்றனர் எனில், இப்பாபத்தை வளர்க்க இடமளித்தவர்கள் சைவருமல்ல; அவர்கள் வைஷ்ணவருமல்ல, இன்றுவரை அவர்கள் யாரோ அறியோம் யாம்!

வாழ்க சமரச வழிமுறை.

ஓம்.

அநுபூதி விளக்கம்

சொல்ல முடியுமா?

[கி. வா. ஜ.]

வானத்தை வில்லாக வளைப்பதாகவும் மணலைக் கயிறாகத் திரிப்பதாகவும் பேசுகின்ற வாய்வீரர்கள் எல்லாககாலததிலும் இருக்கிறார்கள். அப்படிச் செயவேன, இப்படிச செய்வேன என்று பேசசிலே ஆரவாரம் செய்வார்கள். குன்றி மணியளவு செய்திருந்தால் அதைக் குன்றுபோலப் பெரிதாககித் தம்மைத் தாமே புகழ்ந்து வியந்து கொள்வார்கள். வீண் இடம்பப் பேசசிலே பிறரை ஏமாற்ற முடிகிறதோ, இல்லையோ, அவர்கள் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்கிறார்கள். வீண் அகங்காரத்தை வளர்த்துப் பயனற்ற பேச்சிலே பொழுதைக் கழித்துப்

**இல்லா தததையெல்லாம், கற்பனையால் எண்ணியெணிப்,
பொல்லா தனசெய்து புத்திகெட்டுப் போவதுவோ?**

பலரை ஏமாற்றி வாழும் அவர்களுக்கும் ஞானத்துக்கும் எவ்வளவு தூரம்! பக்தியின நிலை அவர்களுக்கு எங்கே தெரியப் போகிறது !

உண்மையாகப் பெரிய செயல்களை நிறைவேற்றியவர்கள் அதைத் தாம் செய்ததாகச சொல்லிக் கொள்ள மாட்டார்கள். இறைவனுடைய மெய்யடியார்களோ எல்லாம் இறைவன் செயல் என்று எண்ணி அகந்தை எழாமல் அடக்குவார்கள். 'இன்னும் செய்யவேண்டியவற்றைச் செய்யாத இழிநிலையில் இருக்கிறோமே!' என்று வருந்துவார்கள். இறைவன் திருவருளை நிரம்பப் பெற்று இன்புறும் பெரியவர்கள்கூட இனியும் மேலான நிலையை அடைய வேண்டுமென்று அவாவி நிற்பார்கள். அது கிடைக்கவில்லையே என்று ஏங்குவார்கள்.

"செழுக்கமலத் திரளனநின் சேவடிசேர்ந் தமைந்த
பழுத்தமனத் தடியருடன் போயினர்யான் பாவியேன்
புழுக்கணுடைப் புன்குரம்பைப் பொல்லாக்கல்வி ஞானமிலா
அழுக்குமனத் தடியேன் உடையாய்நின் அடைக்கலமே"

என்று மாணிக்க வாசகர் பாடுகிறார். அத்தகைய பெரியவர்களே தம்மை இவ்வாறு குறைவாக எண்ணி இரங்குவார்களென்றால், மிகக் குறைவான அறிவினையுடைய நாம் எந்த மூலை ?

பயனற்ற பேச்சும் ஒரு பாவமான செயல்; தமக்கும் பிறருக்கும் பயன சிறிதும் இல்லாத இடம்பப்பேச்சு அகந்தையை வளர்க்கிறது. அதனை நல்லவர்களிடம் காண இயலாது.

அருணகிரிநாதர் ஊரார் குப்பையைத் தம்மேல் ஏற்றிக் கொள்ளும் பரம தயாளுவாயிற்றே. அந்த ஈடும் எடுப்பும் இல்லாத கருணை நிலையில் நின்று தம்மை இழித்துக் கொண்டு

எல்லாரும நல்லவர்கள, எண்ணத்தால சினனவர்கள;
பல்லார் இடமிந்தப் பாவமேன் உள்ளதுவோ?

பேசுகிறார். "நான் இடம்பப் பேச்சுடையவன்; ஆதாளி வாயன" என்று இறைவனிடம் சொல்கிறார். முருகப் பெருமானுடைய பேரருளின திறத்தை எண்ணி வியக்கப் புகுந்தவர், இதனை முன்னே சொல்லிக் கொளகிறார். "எம்பெருமானே! நான் ஆதாளி, நல்லது ஒனறும் அறியாதவன், நான் எத்தனை காரியம் செய்தாலும் அத்தனையும் முழுக்க முழுக்கத் தீயவையாகவே உள்ளன. ஒனறுவது நன்மை இராது" என்று இழித்துக் கொள்கிறார்.

" ஆதாளியை ஒன்று அறியேனை அறத்
தீது ஆவியை "

[இடம்பப் பேச்சுக்காரனை, ஒன்றும் அறியாதவனே, முழுவதும் தீய செயலை மேற்கொள்கிறவனே.]

இப்படித் தம்மை எதற்காக இவர் குறைத்துக் கூறிக் கொள்ள வேண்டும்? முருகன அருட் பெருமையை நினைவூட்டுவதற்காகத்தான். பளளத்தில் வெள்ளம் பாய்வது இயல்பு. அது மேட்டு நிலத்திலே பாய்கிறதெனறால் அது பெரிய ஆச்சரியம். இவ்வளவு இழிநிலையில் இருந்த தம்மை முருகன் ஆட்கொண்டானும், அது எவ்வளவு உயர்ந்த கருணை.

" இவ்வளவு இழிவான பணபுடைய அடியேனை நீ ஆட்கொண்டருளினையே, அந்தப் பெருங்கருணைத திறத்தை நான் சொல்லி அளவிட முடியுமா? பக்குவததில உயர்ந்தவர்களை நீ ஆட்கொண்டு அருளின்பத்தில ஆழ்ததுகிறாய். எத்தனையோ உததமர்கள், நின் அருள் கிடைககவில்லையே என்று ஏங்கி நிற்கிறார்கள். அப்படியிருக்க ஒனறுக்கும் பற்றாத அடியேனை ஆண்டருளினையே! அதனால் எனக்கு விளைந்த இன்பத்தின் சிறப்பைச் சொல்வதா? உன கருணையின் மிகுதியைச் சொல்வதா? எந்த நிலையில் இருநதாலும் உன்னை நினைந்தால் நீ

எந்த மதத்திலும் நன்மை உள(து,)அதனை
தந்தம் வாழ்க்கையினில் தாங்தழுவ வேண்டாவோ?

எளிதில் வந்து தடுத்தாட் கொள்வாய் என்ற தைரியத்தை இந்த ஏழையின் வாயிலாக மற்றவர்கள் நன்கு அறியும்படி செய்ததை வியப்பதா? ''—இவ்வாறு அவருடைய எண்ணங்கள் விரிகின்றன.

" ஆதாளியை ஒன்று அறியேனை அறத்
தீதாளியை ஆண்டது செப்புமதோ! ''

' எவ்வாறு ஆண்டான்? அதனால் என்ன விளைந்தது? '— என்று கேட்டால், அவையெல்லாம் சொல்ல முடியாத அநுபவம் என்றே தோன்றுகிறது. அவன் இன்னவாறு வந்து ஆண்டான் என்பதே அறிவில் தட்டுப்படாதது. " ஆங்கெனை ஆண்டு கொண்டான" என்று திருக்கோவையாரில் வருகிறது. அங்கே பேராசிரியர், ஆண்ட அனுபவம் இன்னவாறு என்று புலப்படுத்துவதற்கு இயலாமையின் நெஞ்சறிசுட்டாகச் சொன்னார் என்று நுட்ப உரை கூறுவர்.

ஊமைத் தசும்புள் நீர் நிறைந்தாற்போல இறைவன் அருளனுபவத்தை நிறைவிப்பான். அது இன்னவாறு வந்தது, இன்ன அனுபவம் உண்டாயிற்று என்று சுட்டிக்காட்ட ஒண்ணாத நிலை அது.

" சொல்லொணாதிந்த ஆனந்தமே "

என்று அலங்காரத்தில் இம்முனிவரே கூறுகின்றார்.

'' சொல்லுகைக் கில்லைஎன்று எல்லாம் இழந்து
சும்மா இருக்கும்
எல்லையுட் செல்ல எனைவிட்டவா "

என்றும் கூறுவார். இத்தகைய அனுபூதியை எண்ணியே,

" ஆண்டது செப்புமதோ "

என்றார்.

கோலத்தால் ஆஸ்திகமும், கொள்கையால் நாஸ்திகமும்
சீலத்தார் கொள்வாரேல், சீரழிந்து போவாரே.

கருவூரார் சொல்லும் கற்பமுறை

(ரஸபதி)

பிராணாயாமத்தில் பிரியம் வைப்பவர், காயத்தைக் கட்டிக் காப்பவர். உரிய உயிர்க்கும் உதவி புரிபவர். இவர்களது இல்லறமே, நல்லறம் என்று நவிலப் பெறும்.

சரியையில அவர்களது மனம் சால்படையும். கிரியையில் புததி கிளர்ச்சி பெறும். யோகத்தில் சித்தம் பூகம் எய்தும். இம் மூன்றன வழியில், சிறக்கச் சிவஞானம் சித்திக்கும். இந்தச் சித் எனும் ஞானத்தை வளர்த்தவர்கள் சிததர்கள் என்று, கனிவொடு தெரிவிக்கிருர் கருவூரார். இப்படி,

'ஆயிரத்திற்கு ஒருவராய்ப் பிறந்து,
அஞ்ஞானம கடந்துமெய்ஞ் ஞானம் அடைவார்'

என்பது அவர் அறிவிப்பு.

சுயநல நினைவால், சூழ்ச்சிச் சொற்களால், உந்திமுதல் உச்சிவரை கொழுபபேறி, வீணுகப பிராணனை விரையம் செய்பவர் பிறா: இநநிலையில் அவாகள், பொனனைத் தேடுவர்; பொருளை நாடுவர்; பூவையரைக கூடுவர்; பொன்றி யழிவர்.

"பாவையர் தாமும், பகர்மன வாளரும்,
சேவலும் கோழியும் தாமது போலப்
பாபங்கள் பெறறது பார்க்க ஒண்ணுதே"

என்று பரதபித்து வருந்திப் பாடுகிருர். அடபாவமே!

அரிவையர் அனைவரும், அம்பிகையின் அமிசத்தர். அந் கேரிழையா அணிவது நெற்றிச் சுட்டி. பின்புறமாக மேலேறி, முன்புறம் வநது முகம் காட்டும் குணடலினியின கோலம் அது.

உலகமி: தூய்ய உணர்வுடையார் எண்ணில்,
கலகம் தவிரும்; கதிபிறக்கும் நிச்சயமே.

இரண்டு மூக்குத்திகளும், இடைகலை பிங்கலைகளை எண்ண வைக்கின்றன.

நடு இருந்த சுழுமுனை நாடியை, உரிய புல்லாக்கு உணர்த்துகின்றது. அதனில் தொங்கும் முத்து, உள்நாக்கில் அமுதகலை ஒழுகுவதை உணர்த்துகின்றது.

புருவநடுக் குங்குமம், அநுக்கிரக சக்தியை அறிவிக்கும்; அதனுடன், அத்தேவி குங்கும நிறத்தள் என்பதையும் குறிப்பிக்கும்.

கண்டத்தில் உள்ள கல்பதித்த அணிகலன், இயல்பான மறைப்பு சக்தியை எண்ண வைக்கின்றது.

இதயம்வரை தொங்கி இருக்கின்ற தாலி, தொட்டிலில் இட்டுத் தாலாட்டி, ஆன்மாவின் அயர்வகற்றும் அம்பிகையை அறிவிக்கும். [தால் - அசைவு.]

இடையில் உள்ள ஒட்டியாணம், காப்பு சக்தியைக் காண்பிக்கும்.

அரைமடி என்னும் அணிகலன், படைப்பு சக்தி இவள் என்று பணிய வைக்கும்.

ஒலிநிறை பிற உறுப்பு ஆபரணங்கள், நம்பெருமாட்டி நாத சக்தி என்ற நினைவை எவர்க்கும் எழுப்பும். இப்படியே பழங்கால அணிகள், ஒவ்வொரு தத்துவத்தை உணர்த்துகின்றன.

காணப் பெறும் எந்தப் பெண்மையிலும், அந்தக் ககன வடிவியைக காண்பவர்கள், ஆத்ம சாந்தியை அனுபவிப்பர். இதற்கு அயலாக, பாழும் செயற்கையில் பாய்பவர் பலர்; அவர்களைப் பற்றிய பேச்சு இங்கு வேண்டா.

போலித் தனங்களெலாம் பொன்றச் செயல்புரியின்,
சீலம் உயரும் சிவக்காட்சி யாகுமமே.

இந்த உத்தம சாதகர்க்கு உதவ நினைத்து, திகழும் புருவக் கதவைத் திறந்து, பிரமரந்திரம் எனும் வாய்மை அந்தப் புரத்திற்கு வா! வா என்று மனோன்மணி வரவேற்பள். உடம்பு இந்த உலகில இருக்க, சிறநத அங்க வழியிற் சென்று, ஆன்மா பரசிவையின அடிமலரில பணியும்.

" வாமிஇவள மர்மம் வைத்துப் பூசை பண்ண
 மதி உனக்கு வேணுமடா அதிக மாக
காமிவெகு சாமிசிவ காம ரூபி
 காணரிது சிறுபிள்ளை கன்னிகன்னி
ஆமிவளை அறிந்தவர்கள சிததர் ; சித்தர்
 அறிந்தாலும் மனமடக்கம் அறிய வேணும்
நாமிவளைப பூசைபண்ண நினைத்த வாறு
 நாட்டினிலே சொலல என்றால நகைபபார் காணே!"

தேவி பூஜையை, அந்தரங்கமாகச் செய்வர் அறிவுடையோர். இளங்கோலச் சேவை தரும் அந்த இறைவியை, சிறக்கச் சேவிததவர் சித்தர்கள். எனினும் அவர்கள், வெளிபபடையாக அந்த அனனை அருளை விளம்புவது இலலை. சொன்னாலும் பேதை உலகம், இது சித்த மருட்சி என்று சிரிக்கும் எனகிறார். மேலும் அத் தேவியின அருட் செயலை,

" காணப்பா இவளுடைய கற்பு மெத்த ;
 கண்டவர்க்கு பெண்ணரசு நானே என்பாள் ;
ஊணப்பா அமுதமிவள் ஊட்டி வைப்பாள் ;
 உள்வீட்டிற்கு உள்ளிருந்து மேலே ஏறப
பூணப்பா மனம் உறைந்து வாவா என்பாள் ;
 புத்திரனே ! என்மகனே ! என்றழைத்து,
வேணப்பா வேணதெல்லாம் தருவேன எனபாள் ;
 வேதாந்த சூக்ஷமம் எல்லாம் விளஙகத்தானே !

நல்லவர் செய் குற்றம் நனிபரவும் ஞாலத்தில்;
எலலவரும் எண்ணினரேல, இன்பநலம் எய்தும்மே.

அடடா! பரம அருளை இப்படி எளிதில் பாலிக்கும் பராபரையின் ரூபத்தைப் பார்த்து,

"மயங்காதே! மௌனத்தில் நில்லு நில்லு!"

என்று, மேலும் எச்சரிக்கை செய்கிறார். என்னதான் செய்வது எனகிறாயா? கேள்!

"நித்தியமார் அர்ச்சனை செய்! பாதம் போற்றி,
நீயும் மதி! மதியும் அதில் அதிகம் ஆமே"

அர்ச்சனை செய! அடிவணங்கு! தியானங் கொள்! அதன பயனாக, அறிவு பெருகும்; ஆநந்தம் காண்பை என்று அறிவிக்கிறார்.

வயிற்றுக்கு வழிதேடி வாயாடுவது பாபம். "காரிகை கற்றுக் கவி பாடுவதினும், பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்று."

'ஆசுகவி மதுரமது பொழியும் வீடு,
அவளருளும் கூடிவினை யாடநாடு'

அவள் அருள் கைவல்யம் ஆனால், நீ காள மேகம்போல் கவிமழை பொழிவை! அவள் அளிக்கும் கலவிதான் கல்வி. மற்றவை எல்லாம், வெறும் கலகல பொலபொல. தெரிகிறதா!

வாமையைப் பலகாலம் அடியேன வழிபட்டேன்! சேவை தந்தாள். அஞ்சி எழுந்தேன். ஆ!

"என்னையுமே இழுத்து, மடி பிடித்துக் கொண்டு,
கொழுந்து விட்டு வளர்ந்தெரியும் அனலை மூட்டி,
குடிகேடி சத்துருப்போல் கூச்சல் இட்டாள்;
அழுதேனே மூநதி இனி அந்த ஊரில்,
அரகரா துணை எனக்கோ யாரும் இல்லை;
எழுந்திட்டார் எல்லாரும் ஓடிப் போனார்;
என்ன செய்வேன்? தனித்திருந்தே ஏங்கினேனே!"

கருமபாம இறையருளைக் காதலித்தா, கூடி
விரும்பிப் பணிபுரியின, விததகமாம் நல்வினை வே.

மகனே! அஞ்சாதே! நந்தனுரை, சிலிர்த்த தீயில் இறக்கி ஏற்றுக் கொண்டார் சிவபெருமான். அதுபோல், போர்த்த உன் ஆசாபாசங்களை, ஆரவாரித்துப் போக்கினேன். என் கூச்சல் கேட்டு, உன்னைப் பற்றி யிருந்த காமாதி உறவினர் கால் வாங்கி ஓடினர் என்ருள்; ஏங்கி விழுந்த என்னை எடுத்தாள். இனிய தன் மடியில் இட்டாள். விரிதத முந்தானையால் விசிறினுள். அயர்வை அகற்றி, உம்பர் அமுதம் உண்பித்தாள். பேரின்ப நித்திரை பெற வைத்தாள் என்று, கருவூரார் அரிய தன் அனுபவத்தை அறிவிப்பது, சக்தி உபாசகர்கட்கு ஒரு சமிக்ஞை.

தேவி உபாசனை தொடங்குமுன், அரிய சில செய்திகளை அறிந்து கொள்ள வேண்டும்.

" பாசமற்று, நேசமற்று, பாரில் வாழும்
பண்புதனை விட்டொழிந்து, பரமே தேடும்
ஆசையுற்ருல், பேரின்பம் ஆகும்"

என்று, குறிப்பாக அவர் கூறும் அனுபவம் கோடி பெறும். பாசம், பயன் ஒன்றும்காணுமல பல்லிளிக்க வைக்கும். நெகிழ்வு கொளள வைககும் நேசம். பாசம், குறித்த பொருள் களில் கொந்தளிப்பை எழுப்பும். நேசம், எபபொருளிலும் நிறைவு காட்டும். பாசம், ஒரு சிலரை உறவாக்கும். நேசம், எவரிடத்தும் தன்னை நிறுத்தும். பாசம் சுயநலச சூழ்நிலை. நேசம் உலகப் பொதுநிலை. பாசம் பகல் குருடு. கடுமை இருளிலும், நேசத்திற்குக் கண்தெரியும். விரையமாக்கும் பாசத்தை விடவேண்டும்; நியதி செயும் நேசத்தில் நிலைக்க வேண்டும்.

உதட்டில் உறவு. இதயத்தில் அன்பு இரா. போர்வை வாய்மையுள் புகுந்து கொளல; உதட்டில் ஆஸ்திகம் இதயத்தில் நாஸ்திகம். இதுதான உலக நிலை. இதன முடிவு கலக-

---

தமபிதனைச் சீறும தமையன போல ஆனக்கால,
இம்பர்வாழ் தர்மத்தை, ஏவர்தான் காப்பாரே?

நிலே. இதனில் நீங்கி இரு. புளியம் பழமும் ஓடும்போல் பொருந்தியிரு ! தாமரையும் நீரும்போல் சமைந்து இரு !

வேதியர்கள், முனிவர்கள் திருவடிகளில் விழுந்து, பேருன அவர்கள்தம் ஆசியைப் பெற்று, இதய சிற்சபையை இறைஞ்சி, கபாலத்தில் தேவியைக் கருதியிரு !

பேருன தேவியின அருளால், பேரின்பம் எய்தும்வரை, இடையரு முயற்சியில் இரு என்று, அவர் கூறும் அருமையே ஒரு தனி.

உபாசகர்க்கு, உடலில் உரம் வேண்டும். இருந்து தியானிக்க, இடுப்பில் சக்தி இருக்க வேண்டும். அது பெற, காய கற்ப மூலிகைகளைக் கண்டு கொள் !

குமரி கற்பம்

சோற்றுக் கற்றாழையில் சோறுஎது. பலமுறை கழுவி, அதைப் பதம் செய்! சுக்கு மிளகு திபபிலி மூன்றிற்கும் திரிகடு கம் என்றுபெயர். அம்மூன்றையும் பொடித்து, அசசோற்றில் சேர்த்து பிசைநது வை. அகத்தும் புறத்தும் ஒழுக்கம் அமைந்து, அம்பிகை இன்புற ஆராதித்து, ஒவ்வொருநாளும் அதில் வெரு கடிப் பிரமாணம் உண்டிரு ! (கட்டைவிரல், சுட்டுவிரல், நடுவிரல் மூன்றையும் குவிததுப் பிடித்து எடுக்கும் அளவு, வெருகடிப பிரமாணம் எனப்பெறும்.)

இதை உண்டால, 'இல்லத்திற்கு இல்லேய், இருப்பாய் பதினறு வயதென்னவே'.

வீண் பொழுது போக்கி விரையம் ஆகாமல், முதலில் இக்கற்ப உறவிற்கு முயற்சிசெய் !

கரிப்பான் கற்பம்

கரிப்பான என்று ஒரு செடி. அதைப் பறி. உதறி எடு. இடித்துச சாறு பிழி. சுண்டக் காய்ச்சு. அதை உள்நாக்கில் ஒரு மண்டலம் தடவு. அதனல் உடல் முழுதும் ஒளிமயமாம்.

உறவின முறையருள் உள்ளனபு கொள்ளாதார்,
நிறனுரும் ஞால நியதியழிக் கின்றாரே.

அழுகணி கற்பம்

இஃது, இலைக்கு இலை நீர் ஒழுகியபடியே இருக்கும். இது மலைகளில் விளை பொருள். பௌர்ணமி யன்று, இதை வேரோடு பிடுங்கு நிழலில் உலர்த்து. இடித்துச சூரணம் செய்துகொள். நலலநாள பார்த்து, பாலும் நெய்யும் தேனும் கலந்து, ஒரு ஆண்டுவரை உண்டு வா.

உண்ணும் காலததில், உபபும் புளியையும் ஒதுக்கிவிடு. காற்றும் வெயிலும் ஆகாது. ஆதலின, வீட்டை விட்டு வெளிபபடாதே! இயலுமேல், ஒரு குகையுள் புகுந்து இரு. இதனால நரைதிரை மாறும். தேகம் வயிரம் ஆகும்.

வல்லாரை கற்பம்

வளம் மிகுந்த மூலிகை வலலாரை. இதை வேரோடு பிடுங்கி, கழுவிச சுத்தி செய்து, உலர்ததிச் சூரணித்து ஒரு வருடம் உண்டால், என்றும் தேகம் இளமையாக இருக்கும். பேரறிவு நிச்சயம் பிரகாசிக்கும். இவர்கள் நூறு வயதுவரை இருபபது திண்ணம்.

தூதுவளை கற்பம்

இதைச் சூரணித்து மூனறு மண்டலம் நெய்யில் உண்டால், குயில்போல் இருக்கும் குரல். தேக சக்தியும் ஞாபக சக்தியும் திமிதம் இடும்.

இருப்பவல் கற்பம்

இருப்பவல் எனபது, பாம்புபோல் கொடி வளைந்து படர்நது இருக்கும். வேரொடு பிடுஙகினால், அடியில் கிழங்கு பெரிதா யிருக்கும். அக்கிழங்கை நிழலில் உலர்த்திச சூரணம் செய்து, ஒரு மண்டலம் வரை வெருகடிப் பிரமாணம் உட்கொண்டால, முந்நூறு வயதுவரை இனிது பலம்பெற்று இருக்கலாம். எனறும் உண்பவர், அளவிலாத காலம் வாழலாம்.

எஙகும் நிறைபீசன, எண்ணுநர்தம் உள்ளத்தில்
தங்கி யிருந்து தயைகாட்டு கின்றனே.

' இருப்பான் கேள்; சாகாமல் இருக்கக் கற்பம்
இன்னம்கேள்! இருப்பவலின் கற்பம் கொள்வாய்;
விருப்பமுடன் அடையாளம் சொல்லக் கேளு!
மீறுகின்ற பாம்புபோல் கொடி படர்ந்து,
இருக்குங்காண் அதன்கிழங்கு பெரிதாகத்தான;
இருந்ததொரு கிழங்குதனை எடுத்துக் கொண்டு,
திருவாக நிழலுலர்த்தி, சூரணித்துத,
திறமாக வெருகடியாய்த் தேனில கொள்ளே! '

எனகிறார். அதுமட்டும் அல்ல. அக்கிழங்கு ஈரமாக இருக்கும் போதே இடித்துச சாறு எடுத்து, அதனில் பாத ரசத்தை இட்டு உறவாக்கி, குகையுள் வைத்து உருக்கிக் குளிகை செய்து கையில் கட்டிக் கொண்டால், நினைத்தது யாவும் நிறைவேறும் எனகிறார்.

ஆயுள் அளிக்கும்; ஆற்றலை உதவும்; நினைத்ததை அளிக்கும அருமை யுடைய இந்த இருப்பவல் போல்வது திருப்புகழ் என்று, ஸ்ரீ அருணகிரிநாதர் தணிகைத் திருப்புக ழில் அறிவிக்கும் அருமையை, நினைக்கவே நெஞ்சம நெகிழ் கிறதே!

(இருபபவல்—உபமானம் , திருப்புகழ்—உபமேயம்; உவம உருபு, உருக கரந்தது. உபமேயத்தினும உபமானத்திற்கே மதிப்பதிகம். அது கருதியே உருபு தொகக்கிருக்க ஓதினர் முனிவர் என்று எணணலாம் போல உளது இச செயல. இருப்பவலால உடல உரமெய்தி, திருபபுகழால உயிர்க்கு உறுதி தேடலாம். இந்த இரணடினும் உறவு பூணடால, எனறும் இறையருள் எய்தி யிருக்கலாம் எனறு, அத்திருப புகழ்க்கு உரைகாணபது, உயாநத நிலை என்று ஊகிககிறது நமது மனம்.)

பேசாதன பேசிப பேதுற்றுச சாயாமல,
ஈசா! உனதடிக்கீழ் என்னை வைப்ப தெந்நாளோ?

உலகில் நல்லவர் பலருளர். வசதி குறைந்த அவர்கள், வம்பும் தும்பும் வளர்ந்த உலகில், வாழ அறியாது வருந்துகின்றனர். கருணையொடு அவர்களைக் காக்க நினைத்து, தங்கம் செய்யும் முறைகளை, தீவிர தம் மாணவர்கட்குக் கருவூரார் தெரிவித்துளர்.

ஏட்டளவில் அவைகளைப் படித்துவிட்டு, கடைச் சரக்குகளையும், கண்ட கண்ட மூலிகைகளையும் பறித்துக் கலந்து, தட்டுப் பொட்டென்று சுட்டுப் பார்த்து, காசைக் கரியாக்கினர்க்குக் கணக்கில்லை.

தம் சீடர்க்கு, உரிய முறைகளை கருவூரார் உபதேசித்து, தேவியை தியானம் செய் !

' நீதியாய்ப பாதபூசை நித்தமும் செய்வா யாகில்
வாதியாய் இருக்கலாகும் மாநிலந் தனனிலன்றே!'
" மையிருங் கண்ணார் ஆசை வலையினில் அகப்படாமல்
மெய்யுடன் மலையேறிப் போய் வேதை பார்! வேதை
தோன்றும் "

[வேதை–வேதித்தத தங்கம் செயயும் முறை.]

இந்த வித்தையின்படி தங்கம் செய்தபின்,

" நீயுபபா வேதை கண்டால், நீமகிழ்ந்து
உண்ண வேண்டாம்
ஈயப்பா சாதுகட்கும், இயல்பர தேசிகட்கும்,
காயத்தோர் தங்களுக்கும் கடும்பசி தீர்ப்பா யப்பா! "

என்று அருளொடு அறிவிக்கும் கருவூராரை, என்றும் மறவார் இயற்கை வாழ்வினர்.

வாழ்க சித்தர்கள் வழிமுறை!

ஓம்.

மருளாட்சி தீர, மதிதெளிய, என்னை
அருளாட்சி செய்ய அழைப்பாய்! அழைப்பாயே!!

HUMANITY IS THE REST-HOUSE OF DIVINITY.

Wonderful and innumerable have been the illustrations provided for us in the spiritual history of man over the ages he had lived through. The universal throb of love that has illuminated the lives of the sages, has always been the living index of divinity, and nowhere has this great truth been proclaimed more effectively than in the illuminating pages of the Puranic lore of God-love and devotion Without the background of human love, compassion and unsolicited service, in relief of suffering, the mere acquisition of power and knowledge, riches and influence, are burdens of inequity with little or no value, and by themselves do not contribute to the happiness and prosperity of the world or any part of it. These reflections crowd into the mind when day by day innumerable cases of cruelty, deprivation of private property, devastation of lodgings of unsheltered human beings, amidst sufferings of depressing poverty and want. are committed in the name of pseudo-politics, race-hatred and religious intolerances and other similar vicious atrocities. Culture and Civilisation are all the time claimed as the universal asset of man. Jesus on the cross the end of Abraham Lincon, Kennedy, Mahatma Gandhi and such innumerable cases still are the living waters for the progress of mankind, and mankind, if it thrives at all it seems to do so on the crucified virtues of angels who had been too good for continued habi-

tation amongst obnoxious men. Ways are many and differences are many. The most profitable path for liberation for man and the world and for all life, seems to be the undaunted courage to claim the God of every being as one's own God, an all inclusive God, the stentorian voice proclaiming the name of God and all His names as the name of our One God, to regard all life as the habitation of the one God and to give of our unstinted love to one and all, regardless of and in disregard of all other differences of caste, designation and other affiliations Man has sufficient space and atmosphere to live, thrive and attain realisation, every other obstacle notwithstanding. May I say this This is also the one saintly and universal message of Tiruppughazh. May Godlove, which can be only interpreted in terms of love of all life, live for ever. May God divinise earth to the ways of all-round righteousness, devotion and service.

—*Thiruppugal Mani*

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரைமீ முதல் பங்குனி முடிய வருட சந்தா உள்நாட்டிற்கு ரூ. 3. பணம் முன்னதாக அனுப்பவும் வி பி. இலலை.

இலங்கைக்கு நான்கு வருட சந்தா ரூ. 14. அனுப்பவும். வி. பி. இல்லை.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா 30 ஷில்லிங்குகள், போஸ்டல் ஆர்டராக அனுப்பலாம்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுப்பினால் தொடர்ந்து பத்திரிகை கிடைக்கும். வருட நடுவில் சந்தாச் செலுத்தினால், சித்திரைமீ முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடுமாயின், சந்தாத் தொகையைப் பெற்றுக் கொள்வம்.

அமிர்தவசனி 54, பந்தர் தெரு, சென்னை.

ஊரிலான் குணம் குறியிலான் செயலிலான் உரைக்கும்
பேரிலான் ஒரு முன்னிலான் பின்னிலான் பிறிதோர்
சாரிலான் வரல் போக்கிலான் மேலிலான் தனக்கு
நேரிலான் உயிர்க் கடவுளாய் என்னுளே நின்றான்.

No. 1506 அசோகா ASOKA நெ. 1506

Regd. No. M. 5390 — ஆவணி ீ (1964 அமிர்தவசனி 16-5)

Coffee
Ours for Quality

RAW, ROAST OR GROUND

GANESH & CO., (MADRAS) PRIVATE LTD.

MADRAS.

நமபிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்

சுவர்ண மாளிகை

A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.

தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்.

124, தெற்காவணி மூலவீதி :: மதுரை

Tel: "FAITH" Estd: 1924. Phone: 2113

குடை மார்க் பிநாயில்

(சிறந்த கிருமி நாசினி)

தயாரிப்பாளரும், விநியோகஸ்தரும்:

ஸ்பிரிட் வேர் ஹவுஸ்

49, சைடன் ஹாம் ரோடு

சென்னை-3.

டெலிபோன்: 33982

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்:

பங்குனி மாதத்துடன் உங்கள் வருட சந்தா முடிவடைகிறபடியால், தயை கூர்ந்து குரோதி வருஷ சந்தாத் தொகையை அனுப்பும்படி ஞாபகப் படுத்துகிறோம். வி. பி. யில் அனுப்ப இயலவில்லை.

அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1. போன்: 22594

Printed by V. Thirunavukarasu at the Rathnam Press (Branch)
65, Tirupalli Street, Madras-1.
Edited & Published by S. Muthuswami 8, Bunder Street, Madras-1